# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 30 ஞாயிற்றுக்கிழமை (13-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:168


## பத்துக் கட்சிக் கூட்டமைப்பின் பேச்சாளர் தகவல்:

# தமிழ்க் கட்சிகளை ஏமாற்றுவதற்கே அரசு பேச்சு என்று நாடகம் ஆடுகிறது

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிப்பதற்கு கபடத் திட்டமாம்

கொழும்பு,மே13

**விடுதலைப் புலிகளுடன் ஓர் உடன்பாட்டை எட்டியிருப்பதான ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்பானது, உண்மையில் சமாதான முயற்சியில் அதற்கு உள்ள உறுதிப்பாட்டின் அடிப்படையில் விடுக்கப்பட்டதல்ல; மாறாக, தனக்கு எதிராகக் கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சிறுபான்மையினரின் கட்சிகளின் ஆதரவு கிடைக்காமல் செய்வதற்கே அரசு இப்படி கபட நாடகம் ஆடுகின்றது.**

**பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார்.**

"மாவனல்லச் சம்பவங்களை அடுத்து, தனக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய எந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் தனது அணியிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கி விடலாம் என்ற பீதியில் அரசுத் தரப்பு உள்ளது. இது பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குள் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. அதுதான் அரசின் குத்துக்கரண அறிவிப்புக்குக் காரணம்.

'அக்கினிச் சுவாலை - I' நடவடிக்கையிலும் பார்க்க அதிக இழப்புகளை கடந்த வருடம் சந்தித்த போதிலும் கூட -

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை நிராகரித்து, வன்னி மீதான பொருளாதாரத் தடையை சிறிய அளவிலேனும் தளர்த்துவதற்கு இணங்க மறுத்துவந்த அரசு, திடீரென துப்பாக்கிகளைத் தள்ளி வைத்து விட்டு, புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துவிட்டதாக இப்போது அறிவித்திருப்பது ஏன்?

(14ஆம் பக்கம் பார்க்க)

### அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி

## நீதியான தீர்வைக் காண்பதற்காக ஆக்கபூர்வமான பேச்சில் ஈடுபடுங்கள்

### இரு தரப்புகளிடமும் கூட்டணி கோரிக்கை

கொழும்பு,மே13

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு நீதியான - நிலைத்திருக்கக் கூடிய - தீர்வு ஒன்றைக் காண்பதற்கான ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபடுமாறும் -

அதற்காக அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமாறும்- யுத்தத்தில் ஈடுபட்டுள்ள - அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய - இரு தரப்புக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்திக் கேட்டிருக்கின்றது.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று நீண்டநேரம் நடைபெற்று முடிந்த பின்னர், அது தொடர்பாகக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தன் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

"தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதற்கு மிகப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஏறாவூரில் இளைஞன் காயம்

மட்டக்களப்பு,மே13

ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி சந்தியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டுவரும் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். ஆபத்தான நிலையில் அவர் உடனடியாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இராசநாயகம் சத்தியநாதன் (வயது 30) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். இவரது உடலில் 6 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் ரெலோ அமைப்பில் இருந்தவர் என்றும், பின்னர் அதிலிருந்து விலகி இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்தவரென்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-6-9)

### கச்சதீவுக்கு அருகே

## கைதான 9 மீனவர்கள் யாழ்.நீதிமன்றில் ஆஜர்

### மேலும் 22 பேர் கடற்படையினரால் கைது?

யாழ்ப்பாணம்,மே13

கச்சதீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 9 இந்திய மீனவர்களும் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஜே.தயாளன், ஏ.குத்திலன், ரி.மைக்கல், வி.நித்தியசீலன், ஏ.கார்மேகம், ஈ.செல்லையா, ஜி.பொன்னுசாமி, பி.ஜோன்வில்சன், எஸ்.ஸ்ராலின் ஆகியோரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராசா உத்தரவிட்டார்.

இதேவேளை -

கச்சதீவுக் கடற்பரப்பில் வைத்து மேலும் 22 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் -

அவர்கள் இன்று யாழ்.நீதிவான் முன் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் என்றும் - பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-பு)

### ஊர்காவற்படை சிப்பாய் பலி!

மாதுறு ஓயாவில் உள்ள ஊர்காவற்படையினரின் நிலை மீது கடந்த 11ஆம் திகதி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவற் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ம)

## இப்போது கூட்டணி அரசின் கூட்டாளி!

### 'தமிழ் நெற்'றில் குற்றச்சாட்டு

கொழும்பு,மே13

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சிதறடிக்கும் நோக்குடன் -- அரசின் பங்காளியாகச் சேர்ந்துகொண்டுதான் - தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

- இவ்வாறு எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியிருப்பதாக "கூட்டணியின் நேர்மை குறித்துச் சந்தேகம்" என்ற தலைப்பில் 'தமிழ் நெற்' இணையத் தளம் நேற்று செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

"பூசலுக்குத் தீர்வு காண்பதற்கு இதுதான் மிகச் சரியான நேரம்" என்று இந்த அறிக்கை மூலம் கூட்டணி இப்போது அவசரப்பட்டு கூற முயல்வது ஏன் என்பது எம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளது" - என்றும் எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அங்கத்துவமாகக் கொண்டுள்ள - பத்துத் தமிழ் கட்சிகளின் - கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாகக் கூறியதாவது:-

'கடந்த சில மாதங்களாக சில அடிப்படை விடயங்களில் கட்சியின் தலைமைத்துவம் ஏமாற்றும் போக்கையே பின்பற்றி வந்திருக்கின்றது. கூட்டணியின் இன்றைய (நேற்றைய) அபார அறிக்கையின் பின்னணியில் தெளிவான காரணங்கள் இருப்பது போல் தெரிகின்றது. அரசுக்கும் புலிகளுக்கும் உள்ள புரிந்துணர்வின் முன்னேற்றம் தொடர்பாக இன்று (நேற்று) அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் வெளியான செய்திகளில் இந்த அவசரத்தின் தொடர்பு தெளிவாகத் தெரிகின்றது.

'சண்டே லீடர்' பத்திரிகையில் - அதிகம் வாசிக்கப்படும் தமிழ் வின

(14ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு எதிரான

## நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு,மே13

முஸ்லிம்களுக்கு எதிரான மாவனல்லைச் சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும் அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு ஐ.தே.கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் வாக்களிக்கும் என்று அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மாவனல்ல சம்பவங்களுக்கு அமைச்சர் மஹிபால ஹேரத்தே காரணம் என்பதால் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டியது முஸ்லிம் காங்கிரஸின் கடமை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இச்சம்பவங்கள் தொடர்பாக எமக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை மிக விரைவில் நிறைவேற்றவில்லை எனின் அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகவும் வாக்களிக்க வேண்டி ஏற்படலாம். இது குறித்து கடுமையான முடிவுகள் எதனையும் எடுக்க நாம் தயங்கமாட்டோம் - என்று அவர் மேலும் கூறினார்.

(ம-6-9)

### தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில்

## மாவனல்ல சம்பவத்தைக் கண்டித்து 17 இல் கறுப்புப் பட்டிப் போராட்டம்

கொழும்பு,மே13

மாவனல்ல பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைக் கண்டித்து நாடு முழுவதிலுமுள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் எதிர்வரும் 17 ஆம் திகதி கறுப்புப் பட்டிப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கமும் கூட்டாக முடிவு செய்துள்ளன.

இது தொடர்பாக அவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 'கை கொடுத்தல் நிதி' உதவி பெறும் 74 சிறுவர்களின் பெயர் விவரம்

யாழ்ப்பாணம், மே13

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தால் காணாமற் போனோர் குடும்பங்களைச் சேர்ந்த 115 பேரின் கல்வி வளர்ச்சிக்காக ஒரு தொகைப் பணம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள 'கைகொடுத்தல் நிதி' வழங்கும் நிகழ்வில் வைத்து இவர்களுக்கான உதவு தொகைகள் கையளிக்கப்படவுள்ளன.

காணாமற் போனோர் குடும்பங்களைச் சேர்ந்த 74 சிறுவர்களுக்கு தலா 2ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்பில் இடப்பட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்படும்.

தற்போது ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தரம், உட்பட தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கல்வி கற்று வரும் 41 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் காசோலைகள் வழங்கப்படும்.

இவர்களுக்கான நிதி உதவியை வழங்குவதற்காக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தினரால் 'உயிர் விசை' என்னும் நாடகம் மேடையேற்றப்பட்டு வந்தமை தெரிந்ததே.

வங்கிப் புத்தகங்கள் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 74 சிறுவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

- சந்திரசேகரம் டொறிங்கன் (49.புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்)
- சந்திரசேகரம் - டினோசன் (49.புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்)
- விவேகானந்தன் - துசாரியா (தேவாலய வீதி, ஆதியாமலை இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி)
- விவேகானந்தன் - பிரசாந்தன் (தேவாலய வீதி, ஆதியாமலை, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி)
- ஜெயபாலன் - கோபிகா (ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
- ஜெயபாலன் - விநோதிகா (ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
- அன்னலிங்கம் - ததீஸ்குமரன் (மே/பா இ.இரத்தினம், சண்டிலிப்பாய் வடக்கு)
- அன்னலிங்கம்- பிரசாந்தினி (மே/பா இ.இரத்தினம், சண்டிலிப்பாய் வடக்கு)
- ஜோண்சன் பானுஜன் (புது வீதி, கொய்யாத்தோட்டம்)
- ரவிச்சந்திரன் தீபன்ராஜ் (பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு)
- கண்ணதாசன் சஜீத் (மே/பா திரு. நித்தியானந்தன் 'கலாபவனம்' வியாபாரிமூலை, பருத்தித்துறை)
- கண்ணதாசன் உசாந்தன் (மே/பா திரு.நித்தியானந்தன் 'கலாபவனம்' வியாபாரிமூலை, பருத்தித்துறை)
- சண்முகம் எழில்வாணி (ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.)
- ஜெயராசா சோபிகா (திருவிளக்கைப் பிள்ளையார் கோயிலடி சங்கரத்தை)
- இராசகுமார் தக்சிலா (ஏழாலை மேற்கு, ஏழாலை, புதவளவு)
- ரமேஸ் தர்மிலா (வேலணை கிழக்கு, நாலாம்வட்டாரம் வேலணைத்துறை)
- அன்ரனி தெய்வேந்திரன் பவித் (கரணவாய் மணியகாரன் தோட்டம் நலன்புரி நிலையம்)
- அன்ரனி தெய்வேந்திரன பிறிமா (கரணவாய் மணியகாரன் தோட்டம் நலன்புரி நிலையம்)
- ஸ்ரீஸ்கந்தராசா ரிஷபன் (எஸ் பானுமதி மே/பா நேசராசா, கண்பொல்லை லேன், கரவெட்டி வடக்கு)
- கணேசலிங்கம் கோகிலன் (வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரம், வேலணைத்துறை)
- அழகரெத்தினம் தனுஸ்கா (அம்மன் வீதி, நிற்சாமம், சங்கானை)
- அழகரெத்தினம் றேகரன் (அம்மன் வீதி, நிற்சாமம், சங்கானை)
- சிதம்பரப்பிள்ளை கமலதாஸன் (வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரம்)
- சிவகுரு ஜெயநந்தினி (சண்டிலிப்பாய் வடக்கு)
- சிவகுரு ஜெனீஸ்வரன் (சண்டிலிப்பாய் வடக்கு)
- இராசிங்கம் தர்சலா, இராசிங்கம் தர்மினி, இராசிங்கம் சிந்துஜா (கியுமெடிகா முகாம், கொக்குவில் கிழக்கு)
- சுப்பிரமணியம் ஆன்றோஜினி புனித ஜேம்ஸ் வீதி, மேற்குத்தெரு, ஊர்காவற்றுறை)
- கணேசமூர்த்தி சுரேஸ்குமார் (சுழிபுரம் மத்தி)
- கணபதிப்பிள்ளை ஸ்ரீக்குமார் (அல்வாய் தெற்கு, அல்வாய்.)
- பூவேந்திரராஜா சுகன்யா, பூவேந்திரராஜா திலக்சினி, பூவேந்திரராஜா வைஷ்ணவி (நாலாவது வீதி, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு)
- ஸ்ரீதரன் ஜெனுஷைவ், ஸ்ரீதரன் ஜெயந்தினி (மிசன் பாடசாலை வீதி, துன்னாலை வடக்கு)
- சிவபுண்ணியமூர்த்தி ஜிந்துசன், சிவபுண்ணியமூர்த்தி சுசிந்தன் (கரவெட்டி கிழக்கு, யாக்கரு வீதி)
- சற்குணராசா மதீசன், சற்குணராசா ராகுலன் (சுழிபுரம் தெற்கு)
- ஜெயராசா ரெக்சன் (உரும்பிராய் மேற்கு, அன்னுங்கை)
- சிவராம் உசேந்தினி, சிவராம் விநோதினி (மூன்று முறிப்பு, வவுனியா)
- சற்குணநாதன் அற்புதகுமார், சற்குணநாதன் மேனகா, சற்குணநாதன் சாமிலா (திருவிளக்கப்பிள்ளையார் கோயிலடி, சங்கரத்தை, துணவி)
- கந்தையா ஸ்ரீருபன் சென் செபஸ்தியார் வீதி கோண்டாவில் கிழக்கு)
- சுதாகரன் ஜஸ்மினா ('நிகலகம்' மானிப்பாய் கிழக்கு, சாத்தாவத்தை)
- ஐயாத்துரை சத்தியசீலன் (துணைவி இல.2, குடியேற்றத்திட்டம், சங்கரத்தை)
- கறுப்பன் சதீஸ் (கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்)
- நாகமுத்து கௌசிகா செங்குந்தாவீதி, கரவெட்டி கிழக்கு)
- வில்பிறட் மேரி மில்கிறேட் (என்.சுப்பிரமணியம் மே/பா கு.வில்பிறட், ஆஸ்பத்திரி வீதி,மானிப்பாய்)
- அன்ரனி மேரி றெனோலா, அன்ரனி நிரோஜன் (15, சச்சமோட்டை கடற்கரை வீதி)
- அருளானந்தம் திருக்குமாரி (34, புதிய குடியிருப்பு, 3ஆம் குறுக்கு, அராலி வீதி, யாழ்ப்பாணம்)
- தர்மலிங்கம் நிசாந்தன் (கற்பொக்கணை, கந்தரோடை)
- லோறன்ஸ் லக்ஸிகோறிற்றா (17,மத்திய கிழக்குவீதி,குருநகர் )
- தேவதாசன் எபிநேசர் (ம. சந்திரலிங்கம் மே/பா கே.மகேஸ்வரி அண்ணாசிலையடி, கரணவாய் தெற்கு)
- நாகராசா பகிதாஸ் (இணுவில் தெற்கு)
- பரமநாதன் கிருஸ்ணவேணி (வட்டு.வடக்கு கலைநகர், நேருஜி சனசமூக நிலையம் அருகில் சித்தங்கேணி)
- சந்திரகுமார் மெளிகா, சந்திரகுமார் யனுசன் (புத்தூர் மேற்கு, புத்தூர்)
- கணபதி நிலாகினி (அல்வியாவத்தை, கோப்பாய் வடக்கு)
- துரைசிங்கம் சிந்துஜா, துரைசிங்கம் வஜைா (மே/பா. மரியாம்பிள்ளை சென் பீற்றேஸ் வீதி, நவாலி தெற்கு)
- ஜெயராஜா கரோல்டமின்டன் (இல. 1, பூங்கா வீதி, குருநகர்)
- ரொனி செலூமியேஸ் (46, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)
- விக்னராஜா அனுசியா, விக்னராஜா தனுசியா (எஸ்.சுலோதயன், மே/பா.இ.அன்னம்மா, துன்னாலை மேற்கு )
- அம்பிகாவதி கௌதம் (உழுதம்பி வல்வெட்டி)
- சதீஸ்குமார் கௌதம், சதீஸ்குமார் சியாம்சன் ('சுபாசினி இல்லம்' தேவரையாளி, அல்வாய் மேற்கு)
- கோமளேஸ்வரன் சுசிகரன், கோமளேஸ்வரன் விஜிகரன் (நவாலி கிழக்கு)

ஏனைய 41 மாணவர்களின் விவரம் பின்னர் வெளிவரும்.(ஜ-6-4)

## இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,மே13

உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கோண்டாவில் அன்னுங்கை இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி மருத்துவ முகாமில் கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை மற்றும் பொது மருத்துவப் பரிசோதனை என்பன இடம்பெறவுள்ளன. (ஜ-4)

## புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

அச்சுவேலி,மே13

வலி. கிழக்கு வடபகுதி பல நோககுக் கூட்டுறவுச் சங்கப் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் க.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

வலிகிழக்கு வடபகுதி(அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கத்தின் பிராந்தியத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்து வருகின்றது. (ம-11)

## பேச்சை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி ஐந்து லட்சம் கையொப்பங்கள்

கொழும்பு,மே 13

சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரசை வலியுறுத்தியும், இனவாதத்தைத் தூண்டும் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் 5 லட்சம் பேரின் கையொப்பங்களைத் திரட்ட ஜனநாயக இடதுசாரி முன்னணி முடிவு செய்துள்ளது.

பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிராக நடத்தப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகவும் இவ்வாறு கையொப்பங்களைத் திரட்டப் போவதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு அரசை வலியுறுத்துவதும் இக்கையொப்பம் திரட்டலின் முக்கிய நோக்கம் எனவும் நாட்டின் பொருளாதாரத்துக்கு அழிவை ஏற்படுத்தும் யுத்தத்தை உடனடியாக முடித்து சமாதானத்தை ஏற்படுத்த விரும்பும் சகல தரப்பினருக்கும் இதற்கு ஒத்துழைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள கையொப்பம் திரட்டும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்க்கட்சிகள் உட்பட சமாதானத்தை விரும்பும் சகல தரப்பினரிடமும் எழுத்து மூலம் தாம் கோரியுள்ளதாகவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (ஜ-10)

## நாவலர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே13

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் நடத்தும் ஆறுமுகநாவலர் நினைவு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலய ஆறுமுகநாவலர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'ஆறுமுகநாவலரை நினைவு கூருதல்' எனும் தலைப்பில் கரவெட்டி பிரதேச செயலர் செ.சிறீநிவாசன் சிறப்புரையாற்றவுள்ளார். (ஜ-4)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சங்கரப்பிள்ளை தாயம்மா

ஏழாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை தாயம்மா நேற்று (12.05.2001) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், இராசையா, பூமணி மற்றும் நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை கையிராசியின் அன்பு மகளும் பத்மாவதி, கமலாதேவி, மகாதேவன் (கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ. கூ.சங்கம்.), விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான இராசதுரை மகேஸ்வரன் மற்றும் செல்வராசா **(C.T.B.)**, இராணி ஆகியோரின் மாமியாரும் சிறிகாந்தன், காலஞ்சென்ற தயாகாந்தன் மற்றும் ஜெயலலிதா (கனடா), பிறேமகாந்தன் (கனடா), ஜெயகாந்தன், ஜீவகாந்தன், பகீரதன், நாகராஜேஸ்வரி (கொழும்பு), செல்வசுஜி (கனடா), செல்வகிரீபன், செல்வகலாபன், மயூரன், மதிவதனி, மதிதர்ஷன், மதிசாந்தன், மதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஜெயஜெனுபன், ஜெனோஜன், ராஜீவன், டிலக்சனா, நிதூஷன், தினுஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உயர்த்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*ஏழாலை மேற்கு,*
*மில்லேன்,*
*ஏழாலை.* (87744)

தகவல்:
ச.மகாதேவன்
(ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்)

## குழந்தையர் குணரத்தினம்

(மடத்தடி, சண்டிலிப்பாய்)

மடத்தடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த குழந்தையர் குணரத்தினம் அவர்கள் நேற்று (12.05.2001) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் குழந்தையர் - தெய்வானை தம்பதிகளின் பாசமிகு மகனும், நளாயினி, நவநீதன், நதுலா, நவசீலி, நவசீலன், நயந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், கார்த்திகேசு, பவளம், பாலசிங்கம், தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகரத்தினம், புவனேஸ்வரியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2001) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி (மானிப்பாய்) மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மடத்தடி,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
கு.நாகேஸ்வரி
மனைவி, பிள்ளைகள.


உ

அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
சமரபாகு, மாடந்தை, வல்வெட்டித்துறை

பஞ்சகுண்டபக்ஷ (108) அஷ்டோத்தர கலச சங்காபிஷேகமும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும்

நிகழும் விஷ® வருஷ சித்திரை 30 ஆம் நாள் 13-05-2001 ஞாயிற்றுக்கிழமை உத்தராட நட்சத்திர புண்ணிய தினமான இன்று வல்வெட்டி மாடந்தை சித்தி விநாயகப் பெருமானுக்கு மேற்படி வைபவம் நடத்தி வைக்கத் திருவருள் பாலித்துள்ளது.

தேவஸ்தான பிரதம குரு
"சாதக மந்த்ர கீத ஜோதி"
சிவஸ்ரீ .சு.விக்னராஜக் குருக்கள்.
சங்காபிஷேக பிரதமகுரு
"கிரியாக்கிரம ஜோதி"
சிவஸ்ரீ சிவகுஞ்சிதபாதக் குருக்கள்.
சிவஸ்ரீ ம.மாணிக்கவாசகக் குருக்கள்.
(பிரதமகுரு, வியாபாரிமூலை, இன்பர் சிட்டி சித்தி விநாயகர் கோயில்)
சிவஸ்ரீ சோ.ஜெயபாலசுந்தரக் குருக்கள்("கிரியாமணி")
(பிரதமகுரு, புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம்)
சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள்.
(பிரதமகுரு, வேவில் பிள்ளையார் கோயில் - வல்வெட்டி)

ஆகியோருடன் மற்றும் பல அனுபூதி நிறைந்த சிவாச்சாரியார்கள் ஒருங்கிணைந்து திறம்பட நிறைவேற்றி வைப்பார்கள்.

இங்ஙனம்
(C/16694) ஆலயபிரதமகுருவும், உபயகாரர்களும்.



வட்டுக்கோட்டை
கலை அபிவிருத்திக் கழகத்தினரின்
மகாபாரதக் காட்சிகள்

காமத்தின் வீழ்ச்சியும் காதலின் எழுச்சியும்
நாட்டுக் கூத்து
புலவர் மணி
க.மயில்வாகனாரின் துணைவியாருக்கு
அஞ்சலி செலுத்தும் முகமாக
கூத்து பிற்போடப்பட்டுள்ளது.
திகதி பின்னர் அறியத்தரப்படும்.

(87743) கலை அபிவிருத்திக் கழகம்.



SUBRA(14)
சித்தன்கேணி
Physical Chemistry
sat., sun. 3-4
Organic Chemistry
sat., sun. 4-5
By.திரு. அன்பு
(87748)



புலமைப் பரிசில் - 2001
பரீட்சை 34 இல்
பரிசுக்குரிய மாணவர்கள்

| | |
|---|---|
| ந.திருத்தணிகன் | - 187 |
| ஆ.ஜதிகானந்த் | - 173 |
| செ.நிரோஜன் | - 173 |
| ம.அழகரசன் | - 170 |
| ந.வேணுசரன் | - 168 |
| அ.சாயினி | - 167 |
| சி.சாரங்கி | - 167 |
| மு.நவநீதசர்மா | - 166 |
| ஏ.கஜலக்ஷி | - 166 |

அடுத்த பரீட்சை - இன்று ஞாயிறு காலை 8.30

தரம் 1 முதல் O/L வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 13

வில்லூன்றி அருள்மிகு வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்தப்பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறுகின்றன.

(ஓ)

★ ★ ★

நவாலி புனித பேதுருவானவர் ஆலய பங்கைச் சேர்ந்த அருட்தந்தை சிலுவைராசா அலெக்ஸிஸ் அருட் செல்வன் இன்று காலை 10 மணிக்கு தமது பங்கு ஆலயத்தில் முதலாவது திருப்பலியை பங்கு மக்களுடன் இணைந்து ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

நவாலி திருச்சபையின் முதலாவது குருவாக கடந்த 7ஆம் திகதி இவர் யாழ். மறைமாவட்டஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தால் திருநிலைப்படுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே (ம-6)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 13

சங்கானை, நிற்சாமம் ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(ஐ-10)

★ ★ ★

சண்டிலிப்பாய், மே 13

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலய வருடாந்த திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது.

(ஐ-135)

## 16 ஆண்டுகளின் பின்னர்

# யாழ். உதைபந்தாட்ட அணி கிழக்கிலங்கை செல்கின்றது

யாழ்ப்பாணம், மே 13

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படவிருக்கும் மாவட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கென யாழ். மாவட்ட அணியினர் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை பயணமாகின்றனர்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணியினர் 16வருட இடைவெளிக்குப் பின்னர் மாவட்டங்களுக்கிடையிலான போட்டிகளில் பங்குபற்றுவதற்காக கிழக்கிலங்கைக்குப் பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எம். ஜே. ரூபசிங்கம் ஆகியோர் மேற்படி அணியினருக்கான போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விளையாட்டு அணியினரின் போக்குவரத்துக்கு ஏற்படும் செலவை வழங்குவார்.

அணியில் இடம்பெறுவோர் விவரம் வருமாறு:-

எஸ். திருமாறன் (தலைவர்), கே. முகுந்தன் (உப-தலைவர்), கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் (முகாமையாளர்), பார்ணாந்து செல்ரன், அகஸ்ரின் ஜியோஜினஸ், இம்மானுவல் ஆனல்ட், இம்மானுவல் ஒலிநெற், அருளானந்தம் நெல்சன், அருளானந்தம் அருள்பிரகாஷ், திருத்துவதாஸ் அஜந்தன், அகஸ்ரின் றொட்னிமார்ஷல், அமிர்தநாதர் சுரேந்திரன், சதானந்தன் வருணானந்தன், சிவனேசன் சுபாஆனந், நிக்கோலஸ் ஜெயந்திரன், இலட்சுமிகாந்தன், அனுராகாந்தன், திருஞானசம்பந்தர் கோகுலன், வைரமுத்து தர்மகுலநாதன், கிறிஸ்தோப்பர் சுரேஸ், வில்லியம் பிறேமானந், மரியதாஸ் சில்வெஸ்ரர், தேவசகாயம் சந்திரகுமார், யேசுதாஸ் விவியன் பிக்லஸ்.

(ஓ-7)

# பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டடங்கள் நிறுவப்படும்

சண்டிலிப்பாய், மே 13

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் குடும்ப சுகாதார அலுவலருக்கான விடுதி, சிற்றூழியர்களுக்கான விடுதி, பிரேத அறைக் கட்டடம் ஆகியவற்றைப் புதிதாக நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து, யாழ். சுகாதாரத் திணைக்களம் இக் கட்டடங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை—

இவ் வைத்தியசாலையில் 24 படுக்கைகளைக் கொண்ட ஆண்—பெண் வாட்டுகள், பிரசவ விடுதி ஆகியன நிறுவப்பட்டு கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. கடந்த போர்க்கால அனர்த்தங்களின்போது இவ் வைத்தியசாலையின் சகல கட்டடங்களும் முற்றாகச் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கிய நிதி உதவியைக் கொண்டு வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் அமைக்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றது. இளவாலை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் இ. கணேசலிங்கம் இவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி வருகின்றார். இதனால் முற்பகல் வேளையில் மட்டும் இவ் வைத்தியசாலையில் நோயாளருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. பிற்பகல் நேரத்தில் இளவாலை அரசினர் வைத்தியசாலையில் நோயாளருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை —

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கென நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்துத் தருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சபை யாழ். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ-135)

# ராணுவக் கைதிகளை தடுத்துவைக்க தனிச்சிறைக்கூடம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம் மே 13

யாழ். சிறைச்சாலையில் இராணுவக் கைதிகளைத் தடுத்து வைப்பதற்குத் தனியான சிறைக் கூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

—இவ்வாறு யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறியதாவது:-

யாழ். சிறைச்சாலையில் அண்மையில் தமிழ் கைதிகளும் இராணுவக் கைதிகளும் மோதிக் கொண்டதை அடுத்து இராணுவக் கைதிகள் அனைவரும் இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மீண்டும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கு தற்போது முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதன் முதற்கட்டமாக அவர்களை தடுத்து வைப்பதற்கு புதிய சிறைக் கூடங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

அவர்களையும் தமிழ் கைதிகளுடன் சேர்த்து அடைத்து வைத்தால் மீண்டும் மோதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாகவே தனியான சிறைக் கூடங்களை அமைத்து அவர்களை தனியாகத் தடுத்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி தனியான சிறைக் கூடங்களை அமைப்பது தொடர்பாக ஆரம்ப மதிப்பீடுகள் செய்யப்பட்டு சிறைச்சாலை திணைக்களத்துக்கு அறிக்கை அனுப்பியுள்ளோம். அதன்படி எமக்கு நிதி உதவி கிடைத்தால் தனியான சிறைக் கூடங்களை அமைத்து இராணுவக் கைதிகளை அதில் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்—அவர்கள் தெரிவித்தனர்.

(ம-6)

# மாணவர்கள் காயம்

நெடுந்தீவில் நேற்று இடம்பெற்ற 'டிராக்டர்' விபத்து ஒன்றில் 4 மாணவர்கள் காயமடைந்தனர்.

ஜெ. மோகனதாஸ் (வயது 18), எஸ். ஜெயன் (வயது 19), கே. பரமராஜா (வயது 16), ம. கவிபராஜா (வயது 18) ஆகிய மாணவர்களே காயமடைந்தவர்களாவர்.

நயினாதீவில் இருந்து நெடுந்தீவுக்கு கல்விச் சுற்றுலாவுக்காக வந்திருந்த மாணவர்கள் சென்று கொண்டிருந்த "டிராக்டர்" திருப்பம் ஒன்றில் வேகமாகத் திரும்பிய போது அதன் பெட்டியில் இருந்த இந்த 4 மாணவர்களும் நிலை தடுமாறி கீழே விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-7)

# இராஜ கோபுரங்கள் அமைப்பு

காரைநகர் சுழத்துச் சிதம்பரத்தில் இராஜ கோபுரங்கள் அண்மையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளன.

இங்கு சிவனுக்கும், ஐயனாருக்கும் அருகருகே அமைக்கப்பட்ட பஞ்சநிலை மாடக் கோபுரமும், திரிநிலை மாடக் கோபுரமும் புனரமைக்கப்பட்டு வர்ணம் தீட்டும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை —

பல லட்சம் ரூபா செலவில் பஞ்சரதங்கள் தரிப்பதற்கான பிரமாண்டமான தேர்முட்டி அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியின் ஒரு பகுதியை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை வழங்கியுள்ளது.

(ஐ-73)

# அன்பளிப்பு

வட அமெரிக்க பெண்கள் அமைப்பு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் குழந்தைகளுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

குழந்தைகளுக்கான சிறிய சட்டைகள், சிறிய துவாய்கள், "பிளாங்கெற்ஸ்", குழந்தைகளின் மெத்தை விரிப்புகள் போன்ற சுமார் 29 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இவற்றில் அடங்கும்.

பெண்கள் அமைப்பினால், இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் மூலம் அனுப்பப்பட்ட இப்பொருள்கள் கடந்த இரு நாள்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

(ம)

## யாழ்ப்பாணத்தில்

# குருகுலப் பாடசாலை அமைத்துத் தரக் கோரிக்கை

## அமைச்சரிடம் நேரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மே 13

பிராமண சமூகத்தைச் சேர்ந்த இளம் சந்ததியினர் தமது குருகுலக் கல்வியைத் தொடர குருகுல பாடசாலை ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று அமைச்சரைச் சந்தித்துப் பேசிய போது இந்தக் கோரிக்கைகளை முன்வைத்ததாக ஈ. பி. டி. பி. அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினைச் சேர்ந்த சிவாச்சாரியார்கள் குழு, ஒன்று நேற்று வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

ஈ. பி. டி. பியின் யாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் 24 குருமார்கள் கலந்து கொண்டனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சிவாச்சாரியார்கள் குழு மந்திர ஒலி எழுப்பி வாழ்த்துப்பாடி ஆசியும் கூறினார்கள். நயினை நாகபூசணி அம்மன் பிரதம குரு அமைச்சர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கலந்துரையாடலின்போது சிவாச்சாரியார்கள் தமது சமூகத்தைச் சேர்ந்த இளம் சந்ததியினர் தமது குருகுலக் கல்வியைத் தொடர குருகுலப் பாடசாலையை அமைத்துத் தரும்படி கோரினர்.

சிவாச்சாரியர்களின் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துள்ள அமைச்சர் அவர்கள், இந்தியாவிலிருந்து சிறந்த ஆசிரியர்களை அழைத்து குருகுலப் பாடசாலையை ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளார். இக்குருகுலப் பாடசாலை நல்லூரில் ஐமுனாராணி கேணியை அண்டியுள்ள காணி ஒன்றில் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் நிதியில் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். குருகுலப் பாடசாலையில் கல்வி கற்கத் தகுதியுடைய மாணவர்களின் விவரங்களைத் திரட்டும்படியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிவாச்சாரியர்களிடம் கேட்டுள்ளார்.

எமது சிவாச்சாரியர்கள் ஒவ்வொருவரும் தாம் கற்ற விதத்தில் கிரியை முறைகளை மேற்கொள்கின்றனர். இதனைத் தவிர்த்து அனைவரும் சீரான முறையில் கிரியைகளை மேற்கொள்ள குருகுல பாடசாலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என சிதம்பரநாதக் குருக்கள் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது ஈ.பி.டி. பியின் இந்து சமய விவகாரப் பொறுப்பாளரும் வலிதென் மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான ந. திரிலோகநாதன் (லோகன்), உடுவில் தொகுதி அமைப்பாளர் கமலசேகரன் (பாபு), நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் (நிசாந்தன்), ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா (மனோ), தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் அலெக்ஸ் சாண்டர் சாள்ஸ் ஆகியோரும் உடனிருந்தனர்.

(ம)

# வள்ளங்களில் பாயுடன் சென்று மீன்பிடிக்கிறார்கள்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். குடாக்கடல் பகுதியில் மீனவர்கள் வள்ளங்களில் பாய்களைப் பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தமக்கு மீன் பிடிப்பதற்கென அனுமதிக்கப்பட்ட வழமையான கடற் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் பாய்களைப் பயன்படுத்தி வருவதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாஜப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

பாஷையூர், குருநகர் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் புரியும் கடற் பிரதேசம்— இராணுவத்தினரின்—512 ஆம் படையணியின் கண்காணிப்பிலேயே உள்ளதென்றும்—

கடற்படையினர் வள்ளங்களில் பாய்களை பயன்படுத்த அனுமதிக்கவில்லை என்று முன்னர் உதயனில் வெளியான செய்தியில் குறிப்பிட்டது சரியல்ல என்றும் இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னரும் பாய்களைப் பயன்படுத்த மீனவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அதே வட்டாரங்கள் மேலும் கூறின.

(அ-10)

# வாழ்வில் நல்ல வழிகாட்டிகளின் சந்திப்பு

# தெய்வ தரிசனங்களாக அமைந்து விடும்!

யோசப்பாலா

அழைப்புகள் வாழ்வில் பல முறை அனுபவிக்கும் நிகழ்வுகளாகும். அந்த அழைப்புகள் பலவகையானவை. விழாவுக்கு, விருந்துக்கு, ஒன்றுகூடலுக்கு, சேவைக்கு, தியாக வாழ்வுக்கு, தலைமைத்துவத்துக்கு என அவை நீண்டுகொண்டே செல்லும் இவற்றில் சில அழைப்புக்கள் சில சந்தர்ப்பங்களில் எம்மைத் தேடி அழைக்கும் சம்பவங்களும் உண்டு.

பிறர் சேவைக்கான அழைப்புக்கள் இன்று பலவாகத் தோன்றினாலும் அந்த அழைப்புக்களை வருவாய்க்காக, கௌரவத்துக்காக ஏற்றுக்கொள்ளப் பலர் முண்டியடிப்பர். சில சமயங்களில் தியாக அர்ப்பண வாழ்வுகள் கூட [மனித பல வீனங்களால் சுய கௌரவம், வருவாய், சுரண்டல் என்ற மாயைக்குள் சுருங்கி அழைப்பின் அர்த்தங்கள் இழந்து விடுவதும் கண்கூடு.

தலைமைத்துவம், அர்ப்பண வாழ்வு வாழ்வோரின் வாழ்வின் முன்மாதிரிகள், மதிப்பிடும் அளவுகோல்கள் மக்களின் மனங்கள்தான். இவ் அர்ப்பண வாழ்வில் தாம் புடமிடப்படுவதும், சவால்களை எதிர்கொள்ள முயல்வதும், சமூக சீர்கேட்டு முறைமைகளைக் களைந்து நின்று, நல்வழிகாட்டுவதும் மிக மிகக் கடினமானது. அதனை மேற்கொள்ளும் துறவுகள் மனித உறவில் வழிகாட்டிகளாகவும், தெய்வ தரிசனங்களாகவும் வாழ்வை வெளிப்படுத்தும் முன்மாதிரிகளே.

சவால் நிறைந்த உலகில் இரு நிலை வாழ்வை வாழ முற்படுவோர் வார்த்தையாலும்; வாழ்வால் பூச்சியமும் வெளிப்படுத்தும் போலி வழிகாட்டிகள் மத்தியில் உண்மைகள் உரைத்து வெளிப்படுத்தி வெற்றி கொண்ட இறையேசுவின் வார்த்தைகள் நல்வழிகாட்டும், நற் செய்தியாக மலர்கிறது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

"நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டு கொள்வர். திருடுவதற்கும், கொல்வதற்கும், அழிப்பதற்கு மன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப்பெறும் பொருட்டு வந்துள்ளேன்; நல்ல ஆயன் நானே; நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரையும் கொடுப்பார்" என்ற கூற்று வாழ்வாக உயிர்த்தது. அதனால் இன்றும் வழிகாட்டும் நல் ஆயனாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

நல்ல தலைவன், நல்லவழிகாட்டி, நல்ல சமூகசேவையாளன், நல்ல ஆயன் தன் வாழ்வில் ஏற்படும் சவால்களை தனித்து நின்று, வெற்றி கொண்டு வழிகாட்டும் போது தியாக வாழ்வின் அழைப்பு அர்த்தமுள்ளதாக வெளிப்படுத்தப்படுகிறது. இன்றைய தலைமைகள், வழிகாட்டிகள், நல்ஆயன், சமூக நேசமுள்ளோரின் அழைப்பும் சமூக வாழ்வை உயிரூட்டமுள்ளதாக மாற்றி அழைப்புக்கு அர்த்தமூட்ட வேண்டும்.

"நான் முன்னேற நான் என்ன செய்ய வேண்டும்" என தன் குருவிடம் கேட்டானாம் சீடன். "நான் இறந்த பின் வழி சொல்கிறேன்" என்றாராம் முனிவர். நான் என்ற மமதை, அகங்காரம் தானே, இது எம் சமூகத்தையும், நாட்டையும் அமைதியாக வாழ விடாது அழிக்கின்றது. அந்த மமதை, அகங்காரம் வழிகாட்டும் மனித மாண்பையே சிதைப்பதால் தானே பட்டம், பதவி, பணமோகம், அதிகாரம் என்ற ஆசைக்குள் அமுக்கி விட்டதால் அதர்ம வழியில் வழிகாட்டும் தலைமைகள் கூட தம் அழைத்தலுக்கு அர்த்தம் புரியாது அந்தரிப்பதைக் காண்கின்றோம். இந்தத் தலைமைகளை, வழிகாட்டிகளை மக்கள் சந்தேகம் கொள்வதும் இயற்கையே.

நல் ஆயன், நல்ல தலைவன், நல் வழிகாட்டியின் ஒவ்வொரு செயல்களும், அசைவுகளும் தொண்டனின் உருவாக்கமாக, மிளிர்வதைக் காண்கின்றோம். தலைவனின் வார்த்தைகள் வாழ்வானதால் வழி தோன்றும் தொண்டனின் வாழ்வும் அர்த்த மூட்டும்.

"ஐயா, இவர் நன்றாக சீனி அருந்துகிறார். இவரை சர்க்கரை வியாதியில் இருந்து காப்பாற்ற வழி கூறுங்கள்" என தன் கணவனுக்கு புத்தி கூறுமாறு வழிகாட்டியிடம் பெண் ஒருத்தி முறையிட்டாள். அவரோ "சற்று காலம் கழித்துவா தான் அவருக்கு சொல்லி வைக்கின்றேன்" என்றாராம். பல வாரம் சென்ற பின் வந்த கணவரிடம் "இனி நீ சர்க்கரை கலந்த பதார்த்தங்களை உண்ணாதே" என புத்தி புகட்டினாராம் அந்த வழிகாட்டி — "இதற்கேன் இவ்வளவு நாட்கள் சென்றது" என கேட்டதற்கு, நானும் அதே நோயால் பாதிப்படைந்திருந்தேன் பாவிக்கும் பழக்கத்தை விட்ட பின்பே மற்றவருக்குச் சொல்ல தகுதியுண்டு. எனக் கூறினாராம். அந்த வழிகாட்டி.

இதுவே வழிகாட்டியின் நற்செயலாகும். கையில் புகைத்தலுடன், தன் மகனை "புகைபிடிக்காதே" எனக் கூறும் வழிகாட்டிகளாக இராது வார்த்தை, வாழ்வோடு இணைந்து செயற்படும் தலைவனே சமூகத்தை காக்கும் நல்ல தலைவன் ஆகிறான். அந்த வழிகாட்டும் தலைவன் நல்ஆயன் எம் வாழ்வுக்கு நற்செய்தி வழியாக பலமுள்ள அழைப்புகளை பலமுறை தரப்பட்ட போதும் அதனை நாம் ஏற்றுக்கொள்ளத் தயங்கியதும், தந்த வாழ்வைத் தவறான வழியில் வாழ்ந்து எம் குடும்பத்திலும் சூழலிலும் தலைமை வழி காட்டும் தகைமைக்கு தவறு இழைத்ததையும் உணர்ந்து திருந்தும் அழைப்புகளும் இன்று சபதமாக ஏற்றுக்கொள்ளும் போதும் அழைப்புக்கு அர்த்த மூட்டப்படுகிறது.

நல் ஆயனின் மந்தைகளான அழைப்பின் குரல்கேட்டு அரவணைக்கும் மனங்களாக நல் ஆயன் வழியில், வாழ்வால், வார்த்தையால் அழைப்புக்குச் செவி கொடுத்து மந்தைகள் என்ற உறவில் இணைந்து உயிர்ப்பூட்டுவோம்.

★

# இசைக்கு மொழி இல்லை; ஏனெனில் உலகப் பொது மொழி அதுவே!

## தமிழ் விழாவில் உரை

குருநகர், மே 13

இசைக்கு மொழி இல்லை. உலகப் பொது மொழி இசை. எந்த மொழியில் பாடினாலும் இசையை ரசிக்க முடியும். வயிற்றுக்குள் இருக்கும் சின்னஞ்சிறு கருகூட இசையை ரசிக்கிறது என விஞ்ஞானம் கூறுகிறது.

யாழ். திருமறைக்கலாமன்றம் நடத்திய தமிழ் விழாவின் நான்காம் நாள் நிகழ்வில் 'இசையின் வளர்ச்சிப் போக்கில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு' எனும் பொருளில் சிறப்புரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத் துறை உதவி விரிவுரையாளர் ஸ்ரீ தர்சனன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். திருமறைக்கலாமன்றம் ஏற்பாடு செய்த தமிழ் விழாவின் நான்காம் நாள் நிகழ்வு கடந்த செவ்வாயன்று மாலை 6.00 மணிக்கு மன்ற அரங்கில் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச் செயலாளர் யோசப்பாலா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து சிறப்புரையாற்றிய ஸ்ரீ. தர்சனன் தெரிவித்ததாவது:-

தமிழ் மொழி பேசும் சகல மதத்தினரையும் திருமறைக் கலாமன்றம் இங்கு வரவழைத்து வந்து, தன் சேவையை வழங்கி வருகிறது யாழ். மண்ணில் முது பெரும்இசைக்கலைஞர்களும், இசை அறிஞர்களும் நீண்டகாலமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் வழியில் நாம் பயணம் செய்கிறோம்.

எந்தத் துறையிலும் செயல்முறை தான், மக்களைக் கவரக் கூடியது. இசையின் தோற்றம் பற்றி கர்நாடக, தமிழ் இசை ஆய்வாளர்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். நாகரிகம் வளராத காலத்தில் இசை உணர்வு மக்களுக்கு இருந்தது. வேட்டையாடித் திரிந்த காலத்திலும் மனிதன் பாடினான். அந்தக் காலத்தில் அவன் இசைக் கருவிகளை வைத்திருந்தான் என்றும் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

மூங்கில் துளையில் காற்று சென்று வருவதை வேட்டையாடிய மனிதன் அறிந்து அதனை அழகாக வெட்டி நெருப்பில் சூடேற்றி ஊதிப்பார்த்த போது அதிலிருந்து சத்தம் வருவதை அறிந்து கொண்டான். இதுவே புல்லாங்குழலாகியது. இதுவே இசைக் கருவிகளின் தோற்றமாகும். வேட்டையில் அகப்படும் மிருகங்களின் தோலை உரித்து காய வைத்து நான்கு மரங்களில் கட்டி. தோலை எடுத்து அடித்த போது இசை உருவானது. இதி தோலை வெவ்வேறு வடிவங்களை உடைய கொள்கலன்களில் கட்டி வெவ்வேறு ஒலிவரக்கூடிய தாளக் கருவிகளை உருவாக்கினான்.

புல்லாங்குழலில் இசை படித்தபோது முதலில் உருவானது மோகனராகமாகும். மோகனராகம் மூலம் இராகபேத முறை மூலம் ஒரு ஸ்வரத்தை திரிவு படுத்தி பல்வேறு ராகங்களை உருவாக்கினான் இத்தகைய இசை இன்று ஒரு லட்சத்து 108 ஆயிரத்துக்கு மேற்பட்ட ராகங்களைக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் வழிபாட்டு இடங்களிலேயே இசைக் கச்சேரிகளை நடத்தினார்கள். இசை வளர வளர மக்கள் இசையில் விருப்பத்தை வைத்தார்கள். எந்த இசை மக்களால் இரசிக்கப்படுகிறதோ அந்த இசைதான் வளர்ந்து வரும். மனிதனால் இரசிக்கக் கூடியவாறு உள்ளது ராகம். இசை, இலக்கணம் மாறாமல், சுருதி தாளம் விலகாமல் — பாடலாம். அதனை மக்கள் ரசிக்கவில்லையென்றால் அது இசையாகாது.

இசையின் வளர்ச்சிப்போக்கில் இன்றைய திரைப்பட இசை மக்களால் விரும்பிக் கேட்கப்படுகிறது. பாரம்பரிய இசை மக்களின் விருப்பத்தைக் கவர்ந்துள்ளது பாரம்பரிய இசை வடிவங்களில் இன்றைய நவீன யுக்திகளைப் புகுத்தி பாரம்பரிய இசை வடிவங்களை மாற்றலாம். பாரம்பரியஇசைகளிலே நவீன தொழில்நுட்பக் கருவிகளை ஓரளவுதான் பயன்படுத்தலாம் ஏனெனில் அதில் இறுக்கமான வரம்பு உண்டு.

ஒலிநாடாவுக்கு முன்வந்த ஒலித்தட்டுக்களில் இசையைப் பாடிப் பதிவு செய்ய முடியவில்லை. 'ரேப்'பில் பதிந்து வீட்டில் கேட்கமுடியும், இசைத்தட்டுக்களின் வருகையால் வீட்டில் இருந்தபடியே ஓரளவு இசையைக் கேட்க முடிந்தது.

### ஒலிநாடாவின் வருகை

அதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட ஒலிநாடாவின் வருகை, ஒலிநாடாவின் குறைகளைப் போக்க அதன் பின்னர் வந்தது கொம்பியூட்டர் டிஸ்க் முன்னர் ஐந்து வருடங்களுக்கு மேல் ஓர் ஒலிநாடாவைப் பாதுகாக்க முடியவில்லை. ஆனால் டிஸ்க் மூலம் எவ்வளவு காலத்துக்கும் இதனை ஒலிப்பதிவு செய்து வைக்கக் கூடியதாக உள்ளது.

தம்புராவிற்குப் பின் சுருதிப்பெட்டி உபயோகத்திற்கு வந்தது. சுருதிகளை கட்டைகள் என அளவிடப்படுகிறது. விஞ்ஞானத்தில் மீடிறன் எனச் சொல்லப்படுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் சுருதிப் பெட்டியும், எமது நாட்டில் உள்ள சுருதிப் பெட்டியும் வேறுபாடுடையன. இத்தகைய கஷ்டங்களைப் போக்கக் கொம்பியூட்டரின் துணையில் அளவீடு செய்யப்பட்டுள்ளது. இது விஞ்ஞான தொழில்நுட்பம் மூலம் கிடைத்த பயனாகும். சுருதிப்பெட்டி வழக்கத்துக்கு வந்தாலும் தம்புராவின் ஒலியைப் பெற முடியாது சுருதிப்பெட்டியின் குறைகளை நீக்க தானியக்கி தம்புராக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது மின்சாரத்தில் இயங்கக் கூடியவை. பின்னர் எலக்ரோனிக் தம்புராவும் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது இசையை ஒலிப்பதிவு செய்ய 'ட்றக்' முறை (Track System) பயன்படுத்தப்படுகிறது பல்வேறு இசைக்கருவிகள் இசைக்கப்பட்டு சி.டி.யில் வைக்கப்பட்டு பாடல்களை எப்போதும் வேண்டிய நேரத்தில் ஒலிப்பதிவு செய்து பேணமுடியும். இவைகளினால் இசைத்துறை புது மெருகு பெற்றுள்ளது — என்றார்.

### தலைமையுரை

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டச் செயலாளர் யோசப்பாலா தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:—

எமது மண்ணில் இதுவரை சாதனை படைத்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் இசை நிகழ்வுகள் காலத்தின் பதிவுகளாக உள்ளன. எமது இசைக் கலைஞர்கள் புதிய பரம்பரையை உருவாக்க உள்ளார்கள். திருமறைக் கலாமன்றத்தின் சாதனை எமது நாட்டைக் கடந்து பிறநாடுகளிலும் பேசப்படும் சாதனையாகிவிட்டது. இது போன்ற புதியபடைப்புக்கள் வளர இம் மன்றம் உதவ வேண்டும். இசையால் மாறாத, மாற்றமுடியாத நோயைக்கூட மாற்றமுடியும். இசையோடு இணைந்தால் எமது மனம் அமைதிபெறும், துக்கத்தில் இருந்து விடுபட இசை உதவும் — என்றார்.

செல்வி எஸ். கணேஸ்வரி குழுவினர் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சியும் விழாவில் இடம்பெற்றது. (ஐ-51-7)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வேலணைப் பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-7)

# 11வயதுச் சிறுமி கிணற்றுக்குப் பலி

அரியாலை, மே 13

கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த சமயம் சிறுமி ஒருத்தி கிணற்றில் தவறி விழுந்து மரணமானாள்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் அராலி மேற்கு புங்கன்குளி என்ற இடத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவராசா அருஞ்சலா (வயது-11) என்ற சிறுமியே மரணமானவர் ஆவர்.

(ஐ-17)

# வரவேற்பு உபசார விழா

சண்டிலிப்பாய், மே 13

வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சிந்திவிநாயகர் ஆலயம் பாரத்தனை ஸ்ரீ ஐயனார் ஆலயம் ஆகியவற்றின் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ நி நித்திய தாண்டவசர்மா சிவாச்சாரியப்பட்டம் பெற்றமையைப் பாராட்டு முகமாக மேற்படி இரு ஆலயங்களின் பரிபாலன சபைகள் இணைந்து நடத்தும் வரவேற்பு உபசார விழா இன்று (13-05-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாரத்தனை ஸ்ரீஐயனார் ஆலயத்திலிருந்து விழா நாயகர் ஊர்வலமாக வடலியடைப்பு புதறானை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்திற்கு அழைத்து வரப்படுவார். அங்கு நடைபெறும் விழாவில் வரவேற்புரையை கிராம அலுவலர் சபா — நாராயணன் நிகழ்த்துவார். ஆசியுரையை 'முத்தமிழ் குருமணி' நா. சர்வேஸ்வரக் குருக்களும், பாராட்டுரையை சர்வதேச இந்துமத குருபீடத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்களும், 'நியந்திரி' செயலரும், யாழ். மாவட்ட மேலதிகப்பதிவாளருமான நா. சதாசிவஐயரும் நிகழ்த்துவார்கள். வாழ்த்துரைகள், சிறப்புரைகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

(ஐ-135)

## உதயன்

### கசிப்பு ஒழிப்பு

யாழ்ப்பாணத்தின் இன்றைய சமூகச் சீரழிவுகளில் கசிப்பு உற்பத்தி - பாவனை, மது பாவனை ஆகிய இரண்டும் முதன்மை வகிக்கின்றன. சமூகநலனில் நாட்டமுள்ளவர்கள் இவை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். பலரும் இவற்றினால் உண்டாகும் பாதிப்புகளையும் கெடுதல்களையும் எழுதியும் பேசியும் வருகின்றனர். ஆனால் அவை தடுக்க முடியாத, வீழ்த்த முடியாத வல்லமை கொண்டனவாக வளர்ந்து வருகின்றன.

கசிப்பு உற்பத்தி - விற்பனை குறித்து தனித்து எந்த அமைப்பும் அல்லது அரச இயந்திரமும் உஷாராகவும் உறுதியாகவும் பயன்தரு நிலையிலும் செயற்பட முடியவில்லை; செயற்படவில்லை என்பது யதார்த்தமாகிவிட்ட நிலையில் -

யாழ்.பல்கலைக்கழக சமூகம் இது விடயத்தில் கவனம் செலுத்தி, சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களையும் ஒருசேர அழைத்துக் கடந்தவாரம் ஆலோசனை மாநாடு ஒன்றை நடத்தியது.

கசிப்பு உற்பத்தி இலகுவில் லாபம் தரும் தொழிலாக மாறியுள்ளது உண்மை. ஆனால் ஒரு சிலர் தமது குடும்பத்தின் ஏழ்மையைப் போக்கவும் இத்தொழிலை நாடியுள்ளனர் என்ற மறுபக்கமும் மேற்படி மாநாட்டில் எடுத்துக் காட்டப்பட்டது.

ஆகையால், கசிப்பு உற்பத்தி என்ற அரக்கத் தொழிலை இல்லாமற் செய்வதற்கு மிகத் துரிதமான இருமுகச் செயற்பாடு தேவைப்படுகிறது.

கசிப்பு உற்பத்தியைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும், சகல மட்டங்களும் தவறாது, தப்பாது, நழுவாது, சுழிக்காது செயற்படுவது ஒரு முகம்.

வறுமை காரணமாக கசிப்பு உற்பத்தியில் தவிர்க்க முடியாத நிலையில் - நிர்ப்பந்தத்தில் - ஈடுபடுவோரை இனங்கண்டு அவர்களுக்கு மாற்றுத்தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பது என்பது இரண்டாவது முகம்.

இந்த மாநாட்டில் நீதித்துறை, அரச நிர்வாகத்துறை, மதுவரித் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அவர்கள் கசிப்பு உற்பத்தி ஒழிப்புக்கு தம்மாலான அதி உச்ச நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள்.

இந்தக் கூட்டு முயற்சி வெறும் மாநாடுகளுடனும் கலந்துரையாடல்களுடனும் நின்றுவிடாமல் மக்களுக்குள் சென்று துரிதகதியில் செயற்படத் தொடங்கவேண்டும். தெரிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை நடைமுறையாக்க, அவரவர் தமக்குரிய பங்கை வெறும் கடமையாகக் கருதாமல், உணர்வுபூர்வமாகச் செயலாற்ற வேண்டும்.

கசிப்பு உற்பத்தி விற்பனையை ஒழிப்பதற்கு முக்கியமான இரண்டு தரப்புகளின் ஒத்துழைப்பும் இன்றி அமையாதது. அதாவது இங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினரதும் பொலீஸாரினதும் ஆதரவும ஒத்துழைப்பும் இன்றி கசிப்பு ஆபத்தை ஒழிப்பது இயலாத காரியம். இந்தத் தரப்புகளினது ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, யாழ்.நீதிபதி இ.த.விக்னராசா வுக்கு உறுதி அளித்திருக்கிறார். இதுவும் ஓர் ஆக்கபூர்வமான கருநிலையாகும்.

கிராம மட்டங்களில் உத்தேச விழிப்புக் குழுக்களை விரைந்து நிறுவி, அவற்றைச் செயற்பட வகைசெய்வதிலும், அவை உண்மையாகவும் இலக்கை எய்தும் திறனுடனும் செயற்படுவதிலுமே கசிப்பு உற்பத்தி - விற்பனை ஒழிப்பின் வெற்றி தங்கியுள்ளது.

# கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு.....

## மணி மண்டபம்

நாட்டு மக்களால் நாட்டின் அதி உயர் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவோர்-

நாற்றிசை மக்களாலும் "நமது தலைவர்" என நெஞ்சார, நாவாரப் பாராட்டப்பட வேண்டியோர்-

நாட்டினதும் நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் 'காவலர்' என்ற உயர்ந்த நிலையை மறந்துவிட்டு - பொறுப்பைத் 'துறந்து' விட்டு -

பெரும்பான்மை இனத்தின் பிரதிநிதியாக மட்டும் தம்மைச் சுருக்கிக் கொண்டு -

தம்மனதைக் குறுக்கிக்கொண்டு -

பேரினவாதப் பேயின் "ஓரின வாதக்" கொள்கைக்கு ஒத்திசைவாக நடந்து கொள்வதும் -

நாம் வாழும் ஸ்ரீலங்கா, சிங்கள பௌத்தர்களாகிய நமக்கு மட்டுமே சொந்தம் -

நாங்கள் பணிக்கப் பிறந்தவர்கள; பணியப் பிறந்தவர்கள் அல்லா-

இந்த நாட்டிலே நாம் இட்டது தான் சட்டமாக இருக்க முடியும் -

அந்தச் சட்டங்களுக்கு அமைவாக வாழும் கடப்பாடு மட்டுமே இங்குள்ள சிறுபான்மை மக்களுக்குண்டு -

என இப்போதைய சிஹல உறுமய, வீரவிதான மக்கள் விடுதலை முன்னணி போன்ற அமைப்புக்கள் வெளிப்படையாகவே கூறிக் கொக்கரித்து வருவதும் -

அவற்றைத் தட்டிக்கொடுத்து, அந்தக் கருத்துகளுக்கு வலுவூட்டும் வகையிலே பொறுப்புவாய்ந்த சில அமைச்சர்கள் நடந்து கொள்வதும்-

இப்படி வெட்ட வெளிச்சமாகக் கூறா விட்டாலும், மாறி மாறி இந்த நாட்டில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பெரும்பான்மை இனக்கட்சிகள், இத்தகைய கருத்துக்களின் அடிப்படையிலேயே தம் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்ததும், வருவதும் -

நாம் கண்டும் கேட்டும் உணர்ந்தும் வருந்தியும் வருகின்ற கசப்பான உண்மைகள்!

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக, புரையோடிய புண்ணாகி, சமீப காலத்தில் ஆற்றமுடியாத அளவுக்கு 'கொதித்து', நாட்டின் வளங்கள் பலவற்றை வரட்டி, கருக்கி உருக்கித்தள்ளுகின்ற இனப் பிரச்சினை இன்னமும் 'தீர்க்கப்படாமல் இருப்பதற்கும் -

இது காரணமாகத் திடீரென்று 'வெடித்த' உள்நாட்டுப் போர், உத்தியோகபூர்வமாக நிறுத்தப்படாமல் இருப்பதற்கும் -

இந்தக் கொடும் போரின் பக்கவிளைவுகளாக -

தமிழ் பேசும் இளைஞர்கள் 'திடீர் திடீரென' கைது செய்யப்படுவதற்கும் -

அவர்களுட் பலர் 'காணமற்' போவதற்கும் -

தமிழ்ப் பெண்களை மானபங்கப் படுத்துகின்ற - அவர்கள் இழக்க விரும்பாததைப் பலாத்காரமாகச் சூறையாடுகின்ற - அரச படையினர் விசாரணையிலிருந்தும் தண்டனையிலிருந்தும் இலகுவாகத் தப்பி செல்வதற்கும் -

அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட ஏனைய பல பொருள்கள் தட்டுப்பாடாக இருப்பதற்கும் -

தீர்வுக்கு திசை காட்டக் கூடிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாமலே இழுத்தடிக்கப்படுவதற்கும் -

பெரியனவும் சிறியனவுமாக உள்ள பல காரணங்களும் -

நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருப்போரின் அகம்பாவமும் ஆதிக்க வெறியும் ஆஷாடபூதித்தனமும் தொடர்ந்துகொண்டிருப்பது முக்கியமான காரணம்!

கல்வி - உத்தியோகம் - கல்யாணம் - சீதனம் - நிம்மதியான குடும்பவாழ்க்கை - என்ற 'அடிபட்ட' பாதையிலே போய்க்கொண்டிருந்த ஈழத்துத் தமிழ்ச் சமுதாயத்திலிருந்து ஆயுதம் ஏந்தும் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் உருவானதற்கு -

பேரினவாதத்தின் பாரம்பரிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் எந்தச் சந்தர்ப்பத்திலே எவ்வாறு அமையும் என்பதை ஆண்டாண்டு காலத்துக் கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் தெளிவாகவும் சரியாகவும் கணிப்பிட்டமையே காரணம்.

'ஆபத்தானவர்' என அரசு நம்பியிருந்த அமெரிக்காவும் ஆட்டம் காணும் கொள்கையை உடைய அயல் நாடும் கொடுக்கத் தொடங்கியுள்ள அழுத்தம் காரணமாகவும் -

ஆயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களுக்கு ஆசை வார்த்தை காட்டி, வெல்ல முடியாத போரிலே அவர்களைக் கொல்ல வைத்தமைக்காக, அந்த இளைஞர்களுடைய பெற்றோரினதும், உற்றாரினதும் தீராத வெறுப்பிற்கும் மாறாத ஆத்திரத்திற்கும் தான் ஆளாகியுள்ளமையை உணர்ந்தமை காரணமாகவும் -

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதை அரசு உணர்ந்து விட்டதைப்போலத் தெரிகின்றது!

ஆனால் -

விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கும் எதிரான சில கருத்துக்களை அது தொடர்ந்து கூறி வருவது -

தனது பாரம்பரியச் சிந்தனைகளைக் கைவிடுவதற்கு அது இன்னமும் தயாராகவில்லை என்பதையே காட்டுகின்றது!

சகல தரப்பினருடனும் அரசு பேசவேண்டும் - நடைமுறைச் சாத்தியமான திட்டத்தைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் - சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி எல்லாவற்றையும் பாழடிக்கக் கூடாது கொடுப்பதைப் பெறுவோம் கொடுக்காதவற்றிற்காகத் தொடர்ந்து 'அழுத்தம்' கொடுப்போம்-

என்ற ரீதியில் தமிழ்த் தலைவர்கள் சிலர் சமீப காலமாகக் கூறிவருவதை நோக்கும் போது -

தானே உருவாக்கிய சில "தலைமைகள்" மூலம் அரசு தனது பேரினவாதச் செயற்பாடுகளையே தொடர முயல்கின்றதோ என்ற நியாயமான சந்தேகம் எழுவதைத் தடுக்க முடியாமல் இருக்கின்றது!

தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் 'கண்ணுக்குள் எண்ணை விட்டுக் ' கொண்டு இருக்க வேண்டிய காலகட்டம் இது!

-சித்தன்.



சந்திரா தனபாலசிங்கம் எழுதிய சிறுகதைகளின் தொகுதியான 'உருப்பெறும் உணர்வுகள்' என்ற நூலின் வெளியீட்டு விழா கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் கடந்தமாதம் நடைபெற்றது.

சிறுகதைத் தொகுதியின் முதற்பிரதியை நூலாசிரியரிடம் இருந்து எழுத்தாளர் கே.விஜயன் பெற்றுக்கொள்ளவதைப் படத்தில் காணலாம்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சீ.வன்னியகுலம் அருகில் காணப்படுகிறார். திருமதி நேசபூபதி நாகராஜன் அமர்ந்துள்ளார். (ஐ)

# 'றாக்கைகள்' அகற்றிய சம்பவம்; யாழ். வணிகர் கழகம் அறிக்கை

யாழ். மாநகரசபையின் உதவியாளருடனும், உயர் அதிகாரிகளுடனும் ஒரு புரிந்துணர்வான கலந்துரையாடலை நடத்தினோம். அக்கலந்துரையாடலில் கடந்த திங்கட்கிழமை மாநகர சபையின் அதிகாரிகளினால் நவீன சந்தையின் உட்பகுதியில் உள்ள கடைகளுக்கு முன்பு இருந்த 'றாக்கைகள்' அப்புறப்படுத்தப்பட்ட செயலானது தமக்குத் தெரியாது நடத்தப்பட்ட ஒரு தவறான செயல் என்பதை அவர்கள் அனைவரும் பெருந்தன்மையுடன் ஒப்புக் கொண்டனர்.

இவ்வாறு யாழ். வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

றாக்கைகள் அகற்றப்பட்ட சம்பவத்தின் காரணமாக மறுநாள் நவீன சந்தை வர்த்தகர்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலை உருவாகியதை அடுத்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக கடைகளைப் பூட்டியதுடன் எமது கழகத்துக்கும் அறிவித்தனர்.

இதனை அடுத்துக் கழகத்தின் தலைவர் தலைமையிலான நிர்வாகக் குழு அவ்விடத்துக்குச் சென்று இந்த விடயம் தொடர்பாக மாநகரசபை அதிகாரிகளுடன் கதைத்து நியாயம் பெற்றுத்தருவதாக உறுதி மொழி வழங்கியது. இதன்பின்பே சகல கடைகளும் திறக்கப்பட்டன.

இதன்பின்னர் மாநகர சபையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எமது கழகத்தினருடன் அங்கு வந்திருந்த சில வர்த்தகர்கள் தமக்கு எழுத்து மூலமோ, வாய் மூலமோ 'றாக்கைகள்' அகற்றுமாறு அறிவிக்கவில்லை என்பதைத் தெரியப்படுத்தினர்.

இவ்வாறான நிலையில் சில பொறுப்பற்ற அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல்களும், பொறுப்பற்ற அறிக்கைகளுமே இச்சம்பவத்தை பெரிதுபடுத்துவதாக அமைந்துள்ளன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

### கூட்டம்

யாழ்ப்பாணம், மே13

யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான வேலை வாய்ப்புத் தொடர்பான அவசர கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஐ10)

### நாளை

சித்திரை 31
திங்கட்கிழமை
திதி: ஸப்தமி
பின்னிரவு: 2.23 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
நள்ளிரவு: 12.33 வரை.
சுபநேரம் : 11.53 - 1.23
ராகுகாலம் : 7.23 - 8.53
(பழைய நேரப்படி)

### நந்தாவிலில் படையினர் திடீர் சோதனை

கொக்குவில் - நந்தாவில் அம்மன் கோயில் பகுதி நேற்றுக்காலை 10 மணியளவில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டது.

திடீரென வாகனங்களில் வந்து இறங்கிய படையினர் வீதியின் இருமருங்கிலும், ஒழுங்கைகளிலும் நின்றனர். இந்த வீதியால் சென்ற பொது மக்கள் அனைவரும் படையினரால் விசாரிக்கப்பட்டனர்.

வாகனங்கள் அனைத்தும் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

இந்த வீதியால் சென்ற பொதுமக்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் மூன்று, நான்கு தடவைகள் படையினரால் இடைமறிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். (ஐ-6-4)

### உதயவாக்கு

தேவைகளை எவ்வளவு குறைத்துக்கொள்கிறோமோ, அவ்வளவுக்கு நமது வாழ்க்கையில் சிக்கல்களும் துன்பங்களும் குறையும் - மு.வ.


### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

உங்கள் கவனத்திற்கு!
இங்கு வி(பு)தைக்கப்பட்டிருப்பது விளைச்சல் தரும் விதைகள் அல்ல;
உயிர்வாங்கக் காத்திருக்கும் மிதிவெடிகள்.



# எல்லாச் சமயங்களையும் அங்கீகரிக்கும் தன்மை அனைத்து மதத்தினருக்கும் அவசியம்

**யாழ்.திருமறைக்கலா மன்றம் நடத்திய தமிழ் விழாவில் கடந்த 11.05.2001 அன்று கலைத்தூது மணிமண்டபத்தில் நடந்த சைவ சித்தாந்த கருத்தரங்குக்குத் தலைமை வகித்த யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராசா ஆற்றிய தலைமை உரை இது. உரையின் முதற்பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

இந்து மதத்தின் தொன்மை பற்றி நாம அறிந்த முதலாவது காலப் பகுதியாக விளங்குவது 'சிந்துவெளி' காலமாகும். சிந்துவெளிக் காலத்தை அடுத்து முக்கியத்துவம் பெறுவது 'வேத காலம்' ஆகும். வேதகாலம் என்பது சிந்துவெளிக் காலத்தை அடுத்து ஏறத்தாழ கி.மு.1500ஆம் ஆண்டளவில் நிலவியது என்பது ஆய்வாளர் பலரும் பொதுவாக ஏற்றுக் கொண்ட கருத்தாகும். சிந்து வெளி நாகரிகத்துக்குரியவர்கள் திராவிடர்கள் என்பதும், வேத கால நாகரிகத்துக்கு உரியவர்கள் ஆரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"சைவ சித்தாந்தம் ஒரு பரந்த ஆழமான தத்துவப் பேராழி. அது தமிழரின் பெரும் சொத்து.

*"மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே"*

என்ற பாடலின் பக்திச் சுவையை வேறெந்த மொழியிலும் மொழி பெயர்க்க முடியாது. இதுவே தமிழன் கண்ட மனித நலவியற் கோட்பாட்டின் ஆதாரமும் பின்னணியும்" என வண. பிதா தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

சைவ சித்தாந்தம் உட்பட தத்துவக் கோட்பாடுகளும் இவற்றைத் தெளிவுபடுத்தும் சமய கோட்பாடுகளும் ஒன்று சேர்ந்ததே இந்து மதமாகும்.

இது ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல் இயற்கையாகத் தானே முகிழ்ந்த ஒரு மதமாகும். தானே தோன்றிய இந்து மதமாயினும் பிறரால் தோற்றுவிக்கப்பட்ட ஏனைய மதங்களாயினும் தாம் தோன்றிய இயற்கைக்கு ஏற்ற இயல்பினையே கொண்டிருப்பதைக் காணலாம். இந்த இயல்பு மதத்தின் தத்துவக் கோட்பாட்டினை விட மதத்தின் சமயக் கோட்பாட்டின் வெளிப்படையாகத் தோன்றுவதைக் காணலாம். மதமானது சாதாரண மக்களிடையே சமயக் கோட்பாடாக - புறச்சடங்குகளாக விரிந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

வலுவான - சிறப்பான - சமுதாய கட்டுக்கோப்புக்கு மதங்கள் பெரும் பணியாற்றி வந்துள்ளன. இதற்கு அரசியல் பொருளாதார கோட்பாடுகளோடு கூடிய அமைப்புகள் ஒரு சவாலாக அமைந்த போதிலும் இவற்றால் முன்னையதனை மாற்ற முடியவில்லை.

மதக் கட்டுக்கோப்புக்கு பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாமிய மதங்களை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த மதக் கட்டுக்கோப்புக்குச் சவாலாக அமைந்ததே கால்மாக்சின் சித்தாந்தமாகும்.

பழைமையும், முதுமையுமுடைய இந்து மதம் பௌத்தம் முதலான மதங்களைப் போன்ற வலுவான - சிறப்பான - சமுதாயக் கட்டுக்கோப்புடையதாயினும் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையைக் காலத்துக்குக் காலம் தோன்றிய ஞானிகள் இந்து மதத்தில் ஏற்படுத்தி இந்து மதத்தைத் தெளிந்த நீர் பாயும் ஜீவ நதியாக்கி உள்ளனர். இதனால் 'கம்பனும் காலமாக்சும்', 'காந்தியும் கால்மாக்சும்' என்ற சமரசம் காணும் மனப்பக்குவத்தை இந்துக்கள் பெற்றுள்ளனர்.

இந்து மதம் காலத்தால் முற்பட்டும் சிறந்த கோட்பாடுகளையும் உடைய காரணத்தால் அதற்குப் பின் தோற்றுவிக்கப்பட்ட மதங்களில் இந்து மதம் உடன் பாடாகவும் எதிர் மறையாகவும் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

'உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை

அற்றே தவத்துக்குரு' என்னும் கோட்பாட்டினையுடைய இந்து மதத்தினர், அக்கருணைக் கோட்பாட்டினைக் கைவிட்டு வேதவேள்விகளில் புரிந்து உயிர்க் கொலைகளைக் கண்டு தாள [illegible] மண, பௌத்த மதங்கள் ஜீவக [illegible] ணைக் கோட்பாட்டை தம்மூச்சா [illegible] கொண்டனர்.

"ஏதில [illegible] குற்றம் போல் தம் குற்றம்" [illegible] வேண்டிய [illegible] மதத்தினர் [illegible] க்கோட்பாட்ட [illegible] கிழந்த வேளையில் பாவ ம [illegible] லும் [illegible] ம தன்மையிலை [illegible] துவம் கோட்பாடாகக் [illegible] டது.

விக்கிரக வணக்கத்தின் தூய்மை [illegible] ட்டுப் பொய்யும் களவும் இந்து மதத்[illegible] ரிடம் புகுந்த போது விக்கிரக வணக்கமே பாவமானது என்ற கோட்பாட்டைக் குரலாக இஸ்லாம் எழுப்பியது.

ஏறக்குறைய கி.பி.1500ஆம் ஆண்டு தொடக்கம் 150 ஆண்டுகள் வரை இலங்கை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழும், அதன் பின் 150 ஆண்டுகள் வரை ஒல்லாந்தர் ஆட்சிக்கும்

**இ.த.விக்னராசா**

உட்பட்டு வந்தது. இந்த 300 ஆண்டுகளும் இந்து சமயத்தைப் பொறுத்த வரை இருள் சூழ்ந்த காலமாகவே இருந்து வந்தது. இரு வகை ஆட்சியாளர்களும் கிறிஸ்தவத்தையே நிலை நாட்ட வேண்டும் என அதற்காக வேண்டிய யாவற்றையும் செய்தனர். சைவ சமயத் திருத்தலங்கள் பல தரைமட்டமாக்கப்பட்டன.

கி.பி.1700ஆம் ஆண்டு வரையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்தது. இவர்களின ஆட்சியில் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் முன்னைய கடுமையான வன்முறைகள் சிறிது தளர்த்தப்பட்டன. இதுவே சைவ சமய மறுமலர்ச்சிக்குக் கால்கோளாக அமைந்தது என்று கூறலாம்.

### நாவலரின் பணி

இருலின் தத்தளித்த சைவ உலகிற்கு ஒளி விளக்கு ஏற்றி வைத்தவர் 1822ஆம் ஆண்டு அவதரித்த நாவலர் பெருமான் என்பதில் சந்தேகம் இல்லை. இவர் தமது வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும் சைவத்துக்கும் அர்ப்பணித்தார். காலத்தின் தேவைகேற்ப தமிழ் வசன நடையை நடைமுறை[illegible]னார்.

[illegible] ஆம் ஆண்டில், பீற்றர் பேர்சிவ[illegible]ளின் வேண்டுகோளுக்கு [illegible] விவிலியம் எனப்படும் புனித பைபிள நூலை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்தவர் நாவலர். பல மொழிபெயர்ப்புகளில் நாவலரின் மொழிபெயர்ப்பே சிறந்தது என சென்னையில் கூடிய கற்றோர் அவை ஏற்றுக் கொண்டது. கிறிஸ்தவ சபையின் அங்கீகாரத்தையும் பெற்றது. "நாவலர் இப்பணியினால், தமிழ் வசன நடை வளர்ச்சிக்கு மட்டுமல்ல கிறிஸ்தவ வேத வளர்ச்சிக்கும் அருந்தொண்டு புரிந்துள்ளார்" என இலங்கையின் முன்னாள் கிறிஸ்தவ அத்தியட்சகர் ஒருவர் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது.

சைவ மறுமலர்ச்சியில் இரண்டாவதாகத் திகழ்பவர் 1924ஆம் ஆண்டு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி முதல்வராகப் பதவி ஏற்ற சைவப் பெரியார் க.சிவபாதசுந்தரனார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள் இந்து சமய உணர்வைச் செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறிஸ்துவ சமயத்தின் மதமாற்றத்துக்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர். கிறிஸ்தவம் தகுதியற்றது என நிறுவப் போராடினர்.

### விவேகானந்தரின் கூற்று

ஆனால், 'முழு உலகுக்கும் ஒளியாய் இருக்கும் இந்து சமயத்தைச் சேர்ந்தவன் என்பதனால் பூரிப்படைகிறேன்' எனப் பெருமையுடன் சிக்காக்கோவில் சிலாகித்த சுவாமி விவேகானந்தர், இந்து சமயத்தைத் தனித்துவப்படுத்திக் காட்டுவன அதன் சகிப்புத் தன்மையும், சுய விமர்சன சுதந்திரமும் ஆகும் என்ற இவரின அணுகுமுறை வித்தியாசமானது. அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால் இந்து மதம் பிற மதங்களுக்குத தாழ்வானதன்று என்பது விளக்கமுற்றது. அதேவேளை இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத்துக்கிடமின்றித் தெளிவாக்கப்பட்டது.

மதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எதுவித ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. ஒவ்வொரு மதத்தவனும் தனது மதத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடப்பாடு இருக்கிறது. எந்த மதத்தையும் பின்பற்றவோ வழிபடவோ எவருக்கும் சுதந்திரம் உண்டு. எல்லா மதங்களையும் அங்கீகரிக்கின்ற - மதிக்கின்ற தன்மை எல்லா மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் அவசியம். ஆனால் ஒரு மதத்தின் தனித்துவங்களை விட்டுக் கொடுக்கும் அளவுக்குப் பெருந்தன்மை அவசியமற்றது. தத்தமது மதங்களைப் பின்பற்றிப் பாதுகாக்கும் அதேவேளையில் மற்ற மதங்களைத் தாழ்த்தாமல் - தண்டிக்காமல் அந்த மதத்தவர்களுக்கு ஊறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.

எல்லா மதங்களுமே அன்பையும், பாசத்தையும், பண்பையுமே போதிக்கின்றன. அத்துடன் நல்லவற்றைச் செய்யவும, தீயவற்றைத் தவிர்க்கவும் மதமானது ஒரு வழிகாட்டியாக ஒளி விளக்காக உதவுகிறது.

(தொடரும்.)

---

## தமிழ் மொழித்தினப் போட்டிகள்

வலி.தெற்கு,மே13

வலிகாமம் கல்வி வலயத்தில் கோட்ட மட்டத்திலான தமிழ் மொழித்தினம் ஜூன் மாதம் 16ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையிலும்-

வலயமட்டத்திலான போட்டிகள் ஜூன் மாதம் 22, 23, 24ஆம் திகதிகளிலும் நடைபெறும் என வலிகாமம் வலய தமிழ்மொழிப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.கந்தையா அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளை நடத்துவதற்கு வசதியாக பாடசாலைகளில் தமிழ்த் தினப்போட்டிகளை இம்மாதம் 31ஆம திகதிக்குள் ஒழுங்கு செய்து முடிக்குமாறு அவர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஐ-152)

## அச்சுவேலியில் நடமாடும் செயலக சேவை

கோப்பாய் பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவை நாளை திங்கட்கிழமை அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த நடமாடும் செயலக சேவை மூலம் அப்பிரதேச மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-72)

---


# இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



H A P P Y  B I R T H D A Y

## செல்வன் தி.கிருஷன்

லண்டனில் வசிக்கும்

திரு.திருமதி தியாகசீலன் – அனுஷா தம்பதிகளின்

### செல்வப் புதல்வன் கிருஷன்

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (13-05-2001) ஞாயிற்றுக கிழமை லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, நல்லூரில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, நல்லூரில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, லண்டனில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள், மச்சான், இத்தாலியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, நல்லூரில் வசிக்கும் சித்தப்பா, சித்தி, லண்டனில் இருக்கும் சாந்தன் மாமா, யாழ்.குட்டி மாமா மற்றும் மாமாமார், சித்திமார், உறவினர்கள் யாவரும் கர்த்தரின் கிருபையால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்து கின்றனர்.

*180, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (87695)

வாழ்த்துவோர்:
**க.சுப்பிரமணியம்**
***தம்பதிகள்.***
(அம்மப்பா, அம்மம்மா)



# தேவை

**DESK-TOP PUBLISHING**

வேலை தெரிந்த பெண்பிள்ளை தேவை.
தமிழ், ஆங்கில ரைப்பிங் (கணனியில்) செய்த முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

*விளம்பர இல.1283*
*மே/பா உதயன்,*
*யாழ்ப்பாணம்*
(C/16679)



மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை
வைத்தியசாலை அபிவிருத்திச் சபை
**மாதாந்தம் நடத்தும்**
எட்டாவது

# இலவச கண் பரிசோதனை முகாம்

★ வடமராட்சியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மட்டும் ★

40 வயதுக்கு மேற்பட்ட 300 பேருக்கு மட்டும் கண் பரிசோதிக்கப்படும்.

பரிசோதனை செய்யும் நிபுணர்கள்

## S.M.பெர்னான்டோ நிறுவனத்தினர்

*இடம்:–* **வைத்தியசாலை 'கிளினிக்' மண்டபம்**
பரிசோதிக்கும் நாள்:- **20-05-2001 ஞாயிறு காலை 10 மணி**

★இரண்டே இரண்டு நாள்கள் மட்டும் முன்கூட்டியே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
15-05-2001 செவ்வாயும் 18-05-2001 வெள்ளியும்
'இ' உலர் உணவு அட்டையுடன் வந்தால் மட்டுமே பதிவுகள் செய்யப்படும்.

இலவச கண்ணாடிகள் வழங்கும் வைபவம் பற்றிய விவரம் கொழும்பிலிருந்து கண்ணாடி கிடைத்ததும் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

**மாவட்ட வைத்திய அதிகாரி,**
**வைத்தியசாலை அபிவிருத்திச் சபை,**
*வல்வெட்டித்துறை.*

அடுத்த எமது ஒன்பதாவது பரிசோதனை முகாம் 17-06-2001 இல் நடைபெறும்.
யாருக்காக? எந்த இடத்தில்? விவரம் பின்னர் அறிவிக்கப்படும். (87710)



# இதய அஞ்சலிகள்

முல்லை மாவட்டதில் தன் தொழில் நிறுவனங்களால் பலரின் வேலை வாய்ப்புகளுக்கு உதவியவரும், ஆலயத்திருப்பணி வேலைகள், தொண்டுகளால் மக்களின் நனமதிப்பைப் பெற்றவரும், நாடகத்துறை, விளையாட்டுத் துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தவரும், உழைப்பால் உயர்ந்து 'செட்டியார்' என்ற பட்டப்பெயரைப் பெற்றுக் கொண்டவருமாகிய,

அல்வாய் 'தவமஹாலை'ச்சேர்ந்த

## அமரர்

## நாகர் கிருஷ்ணபிள்ளை (செட்டியார்)

அவர்கள் கடந்த 10-05-2001 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆலடி ஐங்கரனைப் பிரார்த்திப்பதுடன், எமது இதய அஞ்சலிகளையும் செலுத்துகிறோம்.

அத்துடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*கவிஞர் செல்லையா வீதி,*
*அல்வாய்.*
(87711)

மருமக்கள்:
மா.அம்பிகைபாகன்,
மா.அழகானந்தன்,
மா.அருளானந்தன்,
மா.அனந்தராசன்.

# 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வரி தமிழரின் பரந்த உலக நோக்கின் வெளிப்பாடா?

**யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் அதன் ஒன்பதாவது வருட நிறைவை ஒட்டிக் கடந்த ஏப்ரல் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடத்திய ஆய்வுரைகளில் இடம்பெற்ற 'பண்டைத் தமிழரின் சமூக ஒழுக்கவியல் கோட்பாடுகள்' என்ற தலைப்பிலான பொது உரை (Popular Lecture) இது.**

**மூதறிஞர் சொக்கன் வழங்கிய அந்த உரையின் முதல் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" இது புறநானூற்றின் 192ஆம் பாடலின் முதல் அடி. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1964 ஜனவரி 7ஆம் நாளன்று புதுடில்லியில் நிறுவப்பட்ட பொழுது, அதன் மகுடவாசகமாய் (Motto) இது அமைந்தது. தமிழர் உலகை அரவணைத்து உலகினரை உறவினராய் ஏற்கின்ற பரந்த உளப்பாங்கு கொண்டவர் என்பதை இக் கூற்றுப் புலப்படுத்துவதாக இன்று வரை நாம் நம்பி வருகின்றோம். ஆனால் இதனைத் தொடர்ந்து வருகின்ற பாடல் முழுவதையும் நோக்கும் பொழுது, எமது முடிவினை நாம் மீளாய்வு செய்யவேண்டிய தேவை உண்டாகின்றது.

கணியன் பூங்குன்றனார் இயற்றிய அந்தப் பாடல் இது:-

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*நன்றும் தீதும் பிறர்தரவாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோரன்ன*
*சாதலும் புதுவது அன்றே வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே மின்னொடு*
*வானம் தண்டுளி தலைஇ ஆனாது*
*கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியில்*
*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே.*

"எல்லா ஊரும் நமது ஊரே. எவரும் நமது உறவினரே. தீமையோ நன்மையோ பிறர் தர எமக்கு வருவன அல்ல. சாவதும் புதுவது அன்று. எனவே வாழ்வை இனிது என்று நாம் மதித்தலும் இல்லை. வாழ்வின் இடையில் வெறுக்கத்தக்கதொன்று நிகழ்ந்தாலும் அது கொடியதென்று கருதமாட்டோம். மின்னலோடு குளிர்ச்சி பொருந்திய மழைபெய்து அந்த மழைநீர் கல் மீது மோதிப் பேராறாக ஓடுகையில் அதனிடையே அகப்பட்ட மிதவை தன்னிச்சையின்றி நீர் இழுத்த பக்கம் செல்வது போன்று அரிய உயிரானது அது செய்த வினையின் வழியில் இழுபட்டுச் செல்லும். இவ்வுண்மையைச் சான்றோர் வாயிலாய் நாம் கண்டிருக்கின்றோம். ஆகையால் மாட்சிமை பொருந்திய பெரியோரை நாம் வியந்து பாராட்டுவதுமில்லை மாண்பில்லாச் சிறியோரை இகழ்வதோ அதனிலும் இல்லை." என்பது இப்பாடலின் பொருள்.

இந்தப் பாடற்கருத்தில் இருந்து ஒழுக்கவியல் (Ethics) சார்ந்ததும் சமூகவியல் (Sociology) சார்ந்ததுமான துணைக்கருத்துக்கள் இரண்டு வெளித்தோன்றுகின்றன. அவை வருமாறு:-

**i). நன்றும் தீதும்**

நன்று என்பது நல்லது (Good) எனவும், தீது என்பது தீயது (Evil) எனவும் இரு வேறு நடத்தைகளை உணர்த்துகின்றன. மனித நடத்தையைப் பற்றி அறிவார்ந்த முறையில் ஆராய்கின்ற நியம அறிவியலான (Normatire Science) ஒழுக்கவியல், இவ்விரு சொற்களும் பிரச்சினைக்கு உரியவை எனக் கொள்கின்றது. வில்லியம் லில்லி என்னும் ஒழுக்கவியல் ஆய்வாளர், இவை பற்றிக் கூறுவது உளம் கொள்ளத்தக்கது.

'நல்லது', 'தீயது' என்னும் சொற்களை நாம் பயன்படுத்தும் போது செயல்களின் விளைவில் காணும் 'நல்லதை'யும் 'தீயதை'யும் (இங்கே இவை தெளிவற்ற நிலையில் தாம் குறிக்கப் பெறுகின்றன) குறிப்பிடுவதாயிருந்தால், அவை ஒழுக்கவியலுக்குச் சாதகமாக அமையும் எனக் கூறலாம். உதாரணமாக நம் ஆசைகளை நிறைவேற்றும் விளைவுகளைக் குறிப்பிடலாம். ஆனால், பொதுவாக இந்தச் சொற்களைப் பயன்படுத்தும் போது இப்படி இவற்றுக்கு இன்ன பொருள்கள் என்று வரையறுத்துக் கூறுவது இயலாத காரியம். 'நல்' விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு நன்மையையும் நல்லதையும் கூறும் ஒழுக்கவியற் கொள்கைகளைப் பற்றி நாம் ஆராயும் போது 'நன்மை'யைப் பற்றிய பல்வேறு வகைக் கருத்துக்களைக் காணலாம்." (அறிவியல் - ஓர் அறிமுகம் பக்.89)

மேற்கூறிய கூற்றின் வரையறைக்குள் 'தீயதை'யும் அடக்கிக் கொண்டு இவ்விரண்டினதும் பொருள் பரப்புக்களின் விரிவாக்கங்களுள் நுழைந்து இடர்ப்படுவது இக்கட்டுரையாளரின் கருத்தன்று. ஆனால் ஒழுக்கவியலுக்குப் பிரச்சினை தரும் இவ்விரு சொற்களும் அவற்றின் பொருளும் விளைவுமெல்லாம் சமூகத்தோடு சார்ந்தனவாய் உள்ளன என்பது பொது உண்மை. ஆனால் கணியன் பூங்குன்றனார் 'நாம்' என்று தம்மையும் தமது பாடலைப் படிப்போரையும் உள்ளடக்கிய போதும், அவர் சுட்டும் 'நன்றும் தீதும்' பிறர் தர வாராதவை என்னும் பொருள், அழுத்தம் பெறக் காண்கின்றோம். ஆக, பிறரிலிருந்து விலகிய 'தனி மனித ஆன்மா' பற்றியே புலவர் வலியுறுத்துவதாகக் கொள்ளல் வேண்டும். (Individual sral)

**ii). ஆருயிர் முறை வழிப்படும்:**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது கொண்டு, அது ஒரு சமூக உள்ளீர்ப்புக் கூற்று எனக் கொள்ள முடியாத தடை ஒன்றும் உண்டாகின்றது. இவ்விடத்திலே சமூகவியலுக்கான வரைவிலக்கணத்தினை நோக்குவோம்.

"சமூகவியல் என்பது மனித சமூகம் பற்றி ஆராயும் ஓர் அறிவியல். அது, மனிதக் குழுக்களின் நடத்தையையும் மனிதரிடையே நிலவும் உறவு முறைகளையும் இவ்வுறவு முறைகளுக்கான அடிப்படைக் காரணிகளையும் ஆராயும் தனிமனிதன் ஒருவன், தான் வாழும் சமூகத்தோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பின் வாயிலாக அச்சமூக நியமங்களுடன் தன்னை இணைத்துக் கொள்கிறான்." (Principles of Sociology-Editor Alfred Meclanghee Introduction p.vii)

**~ சொக்கன் ~**

மேலே எடுத்துக் காட்டியவற்றின் அடிப்படையிலே நோக்குகையில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது, உலகோடு ஒட்டாது விட்டு விலகி நின்று, ஒழுக்கம் சமூகம் கடந்த கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டை வலியுறுத்தக் காணலாம். வேறுவகையில் சொல்வதானால், இக்கூற்று 'ஒழுக்கத் தத்துவம்' (Moral Philosophy) ஒன்றை முதன்மைப்படுத்துகின்றதெனலாம். ("சமுதாயம் அற்ற மனிதன் விலங்காகவோ கடவுளாகவோதான் இருகக வேண்டும்" அரிஸ்டோட்டில் - அறிவியல் ஓர் அறிமுகம் பக்.344)

ஆக, அப்பாடல் கொண்டு பண்டைத்தமிழர் யாவரும் ஒழுக்க, சமூகவியல் கடந்த ஆன்மிகவாதிகளாகவே விளங்கினர் என்று முடிவுகட்ட வேண்டியதில்லை. அவர்களின் வாழ்க்கையை முழுமையாக நோக்கும்போது, அவர்கள் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற மகிழ்நிலைக் கோட்பாட்டினர் (Hedonists) என்றே கொள்ளலாம்.

பண்டைத் தமிழரின் வாழ்விலே ஒழுக்கமும், சமூக உணர்வும் மற்றைய இனத்தினரைப் போன்றே முனைப்பாகத் தொழிற்பட்டன என்பதை அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் கொண்டு காண முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு சமுதாயத்தின் வாழ்வியல் அனைத்தையும் அச்சமுதாயத்தில் எழும் இலக்கியங்கள் கொண்டு முழுமையாகக் காண்பது இயலாது என்பதை அறிவேன். எனினும் அவற்றை நுணுகி ஆராயும் பொழுது பல உண்மைகளைக் காணலாம் என்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் நிறுவியுள்ளன. 'பண்டைத் தமிழரின் ஒழுக்க சமூகவியற் கோட்பாடுகள்' என்ற தலைப்பில் அமைந்த இக் கட்டுரை சங்க காலம் என நிறுவப்பட்டுள்ளன. கி.மு மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்கியதாகும்.

## அகமும் புறமும்

சங்ககால இலக்கியங்களாகப் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் கொள்ளப்படுகின்றன. இப் பதினெட்டு நூல்களோடு இவற்றை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் வகுத்த பிற்கால நூலாகிய தொல்காப்பியமும் ஆய்வுக்கு உள்ளாகின்றது.

தொல்காப்பியம் தனது இலக்கணம் காண்டலுக்கு இலக்கியங்களாகக் கொண்ட நூல்களின் பாடுபொருளை(Theme) அகம், புறம் என்ற இரு கூறுகளாக வகுத்து விளக்கம் தர முற்படுகின்றது. இவை அகத்திணை, புறத்திணை என விரிவாக்கம் பெறுகின்றது. திணை என்பது ஒழுக்கத்திணையும் அவ்வொழுக்கம் சிறப்பாக இடம்பெறும் நிலத்தையும் குறிக்கும். அகத்திணை என்பது தலைவ தலைவியர் திருமணத்திற்கு முன்பு காதலுறவு கொள்வதிலே தொடங்கி, திருமணத்தின் பின்பு நடத்தும் குடும்ப வாழ்வு வரையுள்ள செய்திகளை இலக்கியச் சுவைபட உரைப்பது. புறத்திணையாவது போரையும் வீரத்தையும் முதன்மைப் படுத்திப் பேசுவதோடு வாழ்க்கையின பிற கூறுகளையும் சுவையோடு உரைப்பது. இக்கட்டுரையிலே இலக்கியச் சுவையை முதன்மைப்படுத்தாது இலக்கியம் காட்டும் ஒழுக்க, சமூகவியற் கோட்பாடுகளே ஆராயப்படும்.

> **'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழரின் பரந்த உலக நோக்கின் வெளிப்பாடா? பாடல் முழுவதையும் படித்தால் "இல்லை" என்றே சொல்லத் தோன்றும்...**

## அன்பின் ஐந்திணை

ஒரு சமூகத்தில் கடைப்பிடிக்கப்படும் நடத்தைகள் காலப்போக்கில் மீறவியலாத நியமங்களாக(Norms) உரு எடுத்தல் பற்றிய விளக்கம் பின்வருமாறு:

"ஒரு சமூகம் தனது தேவைகளை நிறைவேற்ற இடையறாது முயன்ற வண்ணம் இருக்கின்றது. இச்செயற்பாடுகளே சமூக நடத்தைகளாகும். சமூக வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் நடத்தைகளின் ஒருமுகப்பட்ட சமூக ஏற்புடைமை அவசியமாகும். இந்த ஏற்புடைமையே நியமமாய் உரு எடுக்கின்றது. சமூகத்தின ஒரு சிலரால் சமூக நன்மைக்கு உகந்தன எனக் கருதப்படும் நடத்தைகள் காலப்போக்கில் பலராலும் நீண்ட பரிசோதனைகள், மீள மீளச் செயற்படுத்தல் என்பவற்றால் உறுதிப்படுத்தப்பட்டுச் சமூகம் முழுவதுமே ஏற்கும் நிலை உண்டாகுமானால் அந்த நியமங்கள் நிலை பேறடைகின்றன; நிறுவன மயமாக்கப்படுகின்றன. (வாசுகி சொக்கலிங்கம், அச்சேறாத எம்.பில் ஆய்வேடு 'சங்க இலககியங்களில் மருதத் திணையின் சமூக ஒழுக்க நியமங்கள் பற்றிய ஓர் ஆய்வு. முகவுரை')

இவ்விடத்தில் நியமங்கள் எவ்வாறு பெறுமானங்கள் (Values) ஆகின்றன என்பது நோக்கத்தக்கதே.

"நன்மைகள் அல்லது விருப்பத்திற்குரியவை என்பவற்றை அளவிடுவனவே பெறுமானங்கள் ஆகும். நியமங்களின் உயர் நிலை ஒழுங்கு (Higher order of things) குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நடத்தை பொருத்தமானதா என்பதை வரையறை செய்கின்றது. நியமங்கள் சரியான முறையிலே அவதானிக்கப்படுவதன் மூலமே பெறுமானங்கள் போற்றப்படுகின்றன."

(Shankar Rav- Sociology Page: 509)

குலக்குழு நிலையிலிருந்து (Tribal Stage) வளர்ச்சி பெற்றதன் அறிகுறிகளாக சில சமூக நியமங்களை ஏற்றுக் கொண்டு தமிழ்மக்கள் வாழ்ந்த காலத்தில் குடும்பம் என்ற அலகு, சமூகம் என்ற முழுமையோடு தளப்பமின்றித் தொடர்வுகுக்கப்பட்ட நியமமே அன்பின் ஐந்திணையாகும். குறித்த பருவத்தை அடைந்த ஆணும் பெண்ணும் தமது திருமணத்திற்கு முன்பு ஒருவரை ஒருவர் கண்டுகாதல் உறவு கொண்டு அதன் மூலம் தமது அன்பை வளர்த்துத் திருமணம் புரிவதும் குடும்பம் நடத்துவதுமே அன்பின் ஐந்திணையாகிய அக ஒழுக்கத்தின் உள்ளடக்கமாகும்.

திருமணத்திற்கு முந்தியது களவு என்றும் பிந்தியது கற்பு என்றும் வரையறை செய்யப்பட்டுச் சமூகப் பெறுமானங்களாயின தமிழர் திராவிட இனத்தினர் என்பதும் அவர்களின சமூகம் தாய்வழிச் சமூகம் (Matriachal Society) என்பதும் வரலாற்றறிஞர் கொண்ட முடிவுகள். தாய்வழிச் சமூகத்தில் பெண்ணிற்கே முதன்மையும் தலைமையும் வழங்கப்பட்டன. ஆனால் சங்க இலக்கியங்களிலே பெண் முதன்மை பேணப்பட்டதற்குச் சான்று கிடைப்பது அரிது. எனினும் அவை எழுந்த காலத்தில் அவளுக்கு எஞ்சியிருந்த ஒரே உரிமை, அவளே தனக்குரிய கணவனைத் தேர்தெடுக்க வாய்ப்புப் பெற்றிருந்தமை எனலாம்.

பெண்ணியம் (Feminism) பேசப்பட்டு ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என முழக்கமிடும் இப்புத்தாயிரத்திலும், 'காதல் திருமணம்' திட்டுப்பட்ட ஒன்றாகவோ, சமூகத்தின் முழுமையான அங்கீகாரம் பெறாததாகவோ கருதப்படுகின்றது. விசித்திரமான இன்றைய நிலையோடு சங்க கால காதற் சுதந்திரத்தை ஒப்பிடுகையில் அது அன்பின் ஐந்திணையாகச் சமூக ஏற்புடைமையுடன் திகழ்ந்தமை குறிப்பிட்டுக் கூறவேண்டியதாகும்.

தமிழர் வாழ்ந்த நிலங்கள் நாலாகப் பிரிக்கப்பட்டன. அவை குறிஞ்சி (மலையும் மலைசார்ந்ததுமான நிலம்), முல்லை (காடும் காடுசார்ந்ததுமான நிலம்), மருதம் (வயலும் வயல்சார்ந்ததுமான நிலம்), நெய்தல் (கடலும் கடல்சார்ந்ததுமான நிலம்) என அழைக்கப்பட்டன. இவற்றைவிட குறிஞ்சியும முல்லையும் மழையின்றி வறட்சி காரணமாக சில காலங்களில் தற்காலிகமாய்ப் பாலை என வழங்கியது. களவு, கற்பு சார்ந்த ஒழுக்கக் கூறுகளில் ஒவ்வொன்று குறிஞ்சி முதலாம் நான்கு நிலங்களுக்கும், இரண்டு பாலைக்கும் சிறப்பொழுக்கங்களாய்க் கொள்ளப்பட்டன. குறிஞ்சிக்குப் புணர்தலும் (காதற்கூட்டம்) முல்லைக்கு இருத்தலும், மருதத்துக்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும், பாலைக்கு பிரிதலும், உடன் போக்கும் சிறப்பொழுக்கங்கள். நிலத்தின் புவியியல், சுவாத்தியம் முதலிய காரணிகளால் நிலத்துக்கென்று சிறப்பொழுக்கம் வகுத்துரைக்கப்பட்டாலும் அது எல்லா நிலத்துக்கும் பொதுவாகவும் நிலவும் என்பதை மறுத்தல் இயலாது.

**1) புணர்தல் :** குறிஞ்சி நிலத்தில் ஆண்களின் முதன்மைத் தொழில் வேட்டையாடுதல். பகல் வேளைகளிலே ஆண் மக்கள் வேட்டைக்குச் செல்ல அவர்களின் மனைவியர் தாயார் முதலிய மூத்த உறுப்பினர் வீட்டு வேலைகளில் ஈடுபடுவர். பெண் பிள்ளைகளோ, தங்கையரோ திணைப்புலம் சென்று பயிரை உண்ண வரும் கிளி முதலிய பறவைகளைக் கலைப்பர். அவ்வேளைகளில் அவர்கள் இருக்கும் பரண்களின் அருகில் வரும் பிற குறிச்சி ஆடவ இளைஞர்க்கும் இந்த இளம் பெண்களுக்கும் இடையே காதல் பிறக்க வாய்ப்புண்டாகும். பெண்களின் அந்தரங்கத் தோழியரும், ஆண்களின் கொழுதகைப்பாங்கர்களும் இக்காதல் வளர உதவுவர். இந்நிகழ்வுகளின் கூட்டரவே புணர்தலாகும்.

**2) இருத்தல்:** திருமணமாகிக் குடும்பம் நடத்துகையில் தலைவன் பொருளீட்டவோ அரசுப் பணிக்கோ தலைவியைச் சிலகாலம் பிரிந்து செல்வான். இப்பிரிவின் போது தான் கார் காலத்தில் திரும்புவதாய் வாக்குறுதி வழங்குவான். இந்த வாக்குறுதியை நம்பித் தலைவி காத்திருத்தலே இருத்தல் ஒழுக்கமாகும்.

**3) ஊடல் :** இது புலவி எனவும் படும். திருமணமாகித் தலைவி மகப்பேறு அடைந்த பின் தலைவன் அவள் மீது சலிப்படைந்து பரத்தையை நாடிச் செல்வதால் சீற்றமடையும் தலைவி தலைவனோடு நடத்தும் போராட்டம் ஊடலுள் அடக்கப்பட்டது.

**4) இரங்கல்:** தான் காதலிக்கும் தலைவனையோ தலைவியையோ அடைய முடியாத அவல நிலையில் தலைவிக்கோ தலைவனுக்கோ உண்டாகும் கரைகடந்த சோகம் இரங்கல் ஆயிற்று.

**5) பிரிதல்:** மணமான பின், குழந்தையும் பெற்றான பின் பொருள் தேடத் தலைவன் பிரிவதால் தலைவிக்கு உண்டாகும் கரைகடந்த கவலையும், தலைவன் அவளைப் பிரிவதால் அடையும் கையறு நிலையும் ஏற்படுத்தும் சோகம் பிரிவாயிற்று.

**6) உடன்போக்கு:** (Eloping) 'காதலிருவர்' கடிமணம் புரியப் பெற்றோர் மற்றும் சூழல் தடையாய் இருக்கையில் தலைவன் தலைவியைப் பிறர் அறியாது தன்னோடு அழைத்துச் செல்லல் உடன்போக்கு ஆகும்.

மேலே குறித்தபடி ஒரு நிலத்துக்கு ஓர் ஒழுக்கந்தான் என்பது நாடகப் பாங்கான பிரிப்பு மட்டுமே. இவ்வாறு பிரிப்பதற்கான காரணங்களைக் கூறலாம். விரிவஞ்சி விடுத்து இவற்றினூடாக ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள், வீழ்ச்சிகள், எழுச்சிகள் என்பன அக்கால மக்களின் சமூக, ஒழுக்க வாழ்க்கையில் எவ்வாறு பாதிப்புக்களை ஏற்படுத்தின என்பதே ஆய் விற்குரியதாகும். இவற்றுள்ளும் 'மருதத்திணை'யே இவற்றின் மூலத்தைத் தெரிந்து கொள்ள உதவுமாதலால் அது பற்றிச் சிறிது நோக்குவோம்.

(வளரும்)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே13

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக குழுவுடன் (ஐ.சி.ஆர்.சி) தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ சிவஞானம் சிவதுர்க்கா, ராமலிங்கம் சிவஞானம் (சாவகச்சேரி தெற்கு, சாவகச்சேரி)

★ குமாரவேலு துரைரட்ணராஜா (கலியானக்குளம் எழுதுமட்டுவாழ் வடக்கு)

★ சொக்கநாதன் பரமேஸ்வரி, சொக்கநாதன் கவிதா, சொக்கநாதன் சசிகரன், சொக்கநாதன் அகிலா. (சரசாலை தெற்கு சாவகச்சேரி.)

★ திருமதி தாமரைப்பிள்ளை பாக்கியம் (மந்துவில் கொடிகாமம்)

(ஐ)

## நீர்கொழும்பில் கிறிஸ்தவ மதகுரு குத்திக் கொலை

கொழும்பு,மே13

நீர்கொழும்பு மல்வத்தை வீதியில் அமைந்துள்ள புனித ஜோசப் தேவாலயத்தின் மதகுரு பெர்ணான்டோ கொஸ்தா(வயது 26) என்பவர் கடந்த வியாழன் இரவு 7.30 மணியளவில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரின் சடலம் நேற்று முன்தினம் காலை தேவாலய மண்டபத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(க-3-4)

# மக்கள் இலக்கியப் போக்கை அடையாளப் படுத்தியது மார்க்ஸிஸம்

## 'பாரதிநேசன்' நினைவுக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம்,மே13

இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கை வரலாற்றின் கண்ணோட்டத்திலும் வர்க்கப் போராட்ட அடிப்படையிலும் அணுகி ஆராய்ந்து மக்கள் இலக்கியப் போக்கை அடையாளப்படுத்தியதில் மார்க்ஸிஸம் தனிச் சிறப்பான இடத்தைப்பெற்று வந்திருக்கிறது.

மறைந்த எழுத்தாளர் பாரதிநேசன் சின்னத்தம்பியின் அஞ்சலிக் கூட்டம் அண்மையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் 'இலக்கியமும் மார்க்ஸிஸமும்' என்னும் தலைப்பில் சிறைப்புரையாற்றிய கா.செந்திவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப்பேரவையினால் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

செந்திவேல் தனது உரையில் கூறியதாவது ஒடுக்குமுறைகளையும் ஒடுக்கு முறையாளர்களையும் சுரண்டல் பேர்வழிகளையும் மக்களிடம் இருந்து வேறுபடுத்தி இன்றைய சமூக அமைப்பின் கொடூரங்களை வெளிக்கொண்டுவந்த மக்கள் இலக்கியப்போக்கிற்கு மார்க்ஸிஸமே வழிகாட்டியது. இன்றைய சூழலில் மக்கள் இலக்கியம் படைப்போர் மார்க்ஸிஸவாதிகள் மட்டுமல்ல சமூக முரண்பாடுகளையும் அவற்றின் விளைவான அவலங்களையும் வெளிக்கொணரும் படைப்பாளிகளும் மக்கள் இலக்கியப் படைப்பாளிகளே ஆவர். அவர்களது படைப்புகளில் அம்பலப்படுத்தல், கண்டனம் செய்தல், எதிர்ப்புத் தெரிவித்தல், இழிவுபடுத்தல், கிண்டல் செய்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்கி நிற்பதானது சமூக நலன்சார்ந்த மக்கள் இலக்கியக் கண்ணோட்டமே ஆகும். இத்தகைய நிலைப்பாடு மார்க்ஸிஸவாதிகளினது நிலைப்பாட்டுக்கு விரோதமான ஒன்றல்ல.

ஆனால் மார்க்ஸிஸ படைப்பாளிகள் என்போர் மக்கள் இலக்கியத்தின் மற்றொரு தளத்திலே நின்று செயற்படுவோர் ஆவர். அவர்கள் தமது கூரிய மார்க்ஸிஸ நோக்கின் ஊடாக சமூக முரண்பாடுகளின் அடிப்படைகளை விளங்கிக் கொண்டு அதன் அவலங்களை வெறுமனே விவரிப்பதுடன் மட்டும் நில்லாது அவற்றை மாற்றி அமைப்பதற்கான தீர்வை முன்வைப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். மக்கள் இலக்கியம் படைப்போர் பலர் பல தளங்களில் இருந்தபோதும் அவர்களின் போக்கு மக்கள் மனம் சார்ந்ததாய்- மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாய் - மக்களை அணிதிரட்டுவதாய் அமைத்தல் வேண்டும். இத்தகைய மக்கள் இலக்கியத்துக்கு வரலாற்று ரீதியான வளர்ச்சிப்போக்கும் அதன் அனுபவச் செழுமையும் புதிய தலைமுறையினரால் பயனுள்ள விதத்தில் உள்வாங்கப்படல் வேண்டும்.

மறைந்த பாரதிநேசன் சின்னத்தம்பி தனது பாடசாலைக் காலத்திலேயே ஏற்றத்தாழ்வுடைய சமூக அமைப்பைநோக்கி கேள்விகளை எழுப்பியவர். அவ்வாறான கேள்விகளுக்கு விடைதேடும் பாதையிலேயே மார்க்ஸிஸத்தை தனது உலகநோக்காக உள்வாங்கிக்கொண்டார். அதனைத் தனது வாழ்வுடன் இணைத்து வாழக்கையின் இறுதிவரை அதனைக் கடைப்பிடிக்கும் ஒருவராக வாழ்ந்துவந்தார்.

இளமைக்காலத்தில் மார்க்ஸிஸத்தை ஏற்பதும் நடுத்தர வயதுக்குப் பின் படிப்படியாக அதிலிருந்து விடுபட்டுக்கொள்வதென்றும் கூறப்படும் கூற்றைத் தவறென நிரூபித்தவர்களுள் சின்னத்தம்பியும் ஒருவராவர்.

மார்க்ஸிஸம் பலவீனம் அடைந்து இறந்துவிட்டதென்றும் அது கல்லறைக்கு அனுப்பப்பட்டுவிட்டதென்றும் கூறப்படும் இக்காலத்தில் மார்க்ஸிஸதின் மகிமையை சொல்லாலும் செயலாலும் முன்னெடுத்துச் செல்வதில் சின்னத்தம்பி முன்னின்று உழைத்தவர். அவரது இழப்பு மார்க்ஸிஸத்துக்கும் மக்கள் இலக்கியத்துக்கும் ஒரு பெரும் இழப்பாகும்.

மார்க்ஸிஸவாதிகள் தமது சொந்த வாழ்வுக்கு அப்பால் பொது வாழ்வையும் மனிதநேயத்தையும் மனித குல விடுதலையையும் ஆழமாக நேசித்து வாழ்பவர்கள் என்பதற்கு பாரதிநேசன் சின்னத்தம்பி போன்றவர்கள முன் உதாரணமாகத் திகழ்ந்துள்ளனர் - என்றார்.

### தலைமையுரை

இந்தக் கூட்டத்துக்கு தலைமை வகித்த கவிஞர் இ.முருகையன் தனதுரையில் -

சிறந்த பத்திரிகை எழுத்தாளராகத் திகழ்ந்த பாரதிநேசன் சின்னத்தம்பி தன்னைப் பிறர் மத்தியில் ஒரு பொதுவுடைமைவாதி எனக் கூறுவதில் பெருவிருப்புடையவர். இவர் தனது வாழ்க்கைப் பயணத்தில் எந்தக் கோட்பாட்டை வரித்துக் கொண்டாரோ அதனையே இறுதிவரை கடைப்பிடித்து வந்தார் என்பது - அவருடைய தனிச் சிறப்பாகும். எனவே அவருடைய நினைவை கௌரவித்து அஞ்சலி செலுத்துவது எமது கடமையாகும் - என்று கூறினார்.

அடுத்து உரை நிகழ்த்திய 'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியர் வி.தணிகாசலம் கூறியதாவது:

அமரர் சின்னத் தம்பி தேசியப் பத்திரிகைகளிலும் அரசியல் பத்திரிகைகளிலும் இன்றுவரை எழுதிய எழுத்துக்களில் இம்மண்ணின் விடுதலையையும் மக்களின் உணர்வுகளையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

62 வயதுகளைக் கடந்த நிலையிலும் தன்னைப் பொதுவுடைமையாளனாகக் காட்டிக்கொண்டு பெரும் சமூகப் பணிகளைச் செய்து வந்தவர் - என்று கூறினார். (ஐ-4)

---

கலை ... சேதமாக்கப்பட்ட

# பள்ளிவாசல்களைப் புனரமைக்க நிதி சேகரிக்கும் திட்டம்

கொழும்பு,மே13

மாவனல்லவில் இடம்பெற்ற கலவரத்தின் போது பலத்த சேதத்துக்குள்ளான பள்ளிவாசல்களைப் புனரமக்கும் பணியை மேற்கொள்ளும் முகமாக நிதி சேகரிக்கும் திட்டம் ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தனது சொந்தப் பணத்தில் 1லட்சம் ரூபாவை வழங்கி இந்த நிதி திரட்டும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்துள்ளார். (க-4)

# பாடசாலை மாணவரிடையே நாடளாவிய சுவரொட்டிப் போட்டி

வலிகாமம் தெற்கு,மே13

சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடும் முகமாக மனித உரிமைகளுக்கும், அபிவிருத்திக்குமான வழக்கறிஞர் சங்கத்தின் சிறுவர் பிரிவு ஐந்தாவது தடவையாக இவ்வருடமும் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்க உள்ளது.

இலங்கைச் சிறுவர்கள் மத்தியில சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வையும் முழுமையான அறிவையும் ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வுடன் இப்போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தடவை நடைபெற்ற போட்டிகளின் போது 700க்கும் மேற்பட்ட பாடசாலைகள் போட்டியில் உற்சாகமாகக் கலந்து கொண்டன.

கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகள் சம்பந்தமான கண்காட்சி ஒன்றும் கொழும்பு பொது நூலகத்தில் ஒக்ரோபர் மாதம் 3,4,5ஆம் திகதிகளில் நடத்தப்பட உள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 200 சிறந்த சித்திரங்கள் இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி பரிசளிப்பு விழா ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி நடைபெறும்.

12-15 வயது பிரிவினர் கனிஷ்ட பிரிவாகவும்-

16-18 வயது பிரிவினர் சிரேஷ்ட பிரிவாகவும்-

போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே 4,000 ரூபா, 2,000ரூபா, 1,000ரூபா பணமும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் ரூபா 500 பெறுமதியான 5 விசேட ஆறுதல் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிகளுக்கான ஆக்கங்களை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்குள் அனுப்பி வைக்குமாறு நிறைவேற்று பணிப்பாளர் கல்யானந்த திராணகம அறிவித்துள்ளார். (ஐ-152)

---


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம.

# 34ஆம் நாள் நினைவஞ்சலியும்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 03 - 06 - 1921



உதிர்வு 10 - 04 - 2001

திருமதி

தங்கராசா செல்வரத்தினம்

அன்புத் தாயாய் பண்புமிகு மாமியாய்
பரிவுமிகு பேர்த்தியாய் - பாசத்துடன் பலர் போற்ற வாழ்ந்த
எம் தெய்வமே! - எம் உடலில் உயிர் உள்ளவரை
ஆறாது நம்துயர் - நீங்காத நினைவுகளோடு
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னையின் மறைவு கேட்டு நெகிழ்ந்துகந்த நெஞ்சங்களுக்கும் எம் நன்றிகள்.

குறிப்பு- அமரத்துவம் அடைந்து 31ஆம் தினமாகிய 10-05-2001 வியாழக்கிழமை வில்லூன்றியில் அந்தியேட்டிக் கிரியையும் அடுத்து வீட்டுக் கிருத்திய நிகழ்வும் இடம்பெற்றது.

இன்று (13-05-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்களுக்கும் அழைப்பிதழ்(காட்) நேரில் சென்று கொடுபட்டபோதிலும், கொடுபடத் தவறியவர்களும் இந்த அன்பு அழைப்பை ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

'இராஜேஸ்வரி இல்லம்'
அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(87637)


---

# நூல் அறிமுக விழா

வலிகாமம்தெற்கு,மே13

மறுமலர்ச்சி எழுத்தாளர் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சரசர்மாவின் நூல் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் வடக்கு கந்தசாமி கோயில் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிமுதல் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வுக்கு மூத்த எழுத்தாளரும் அறிஞருமான சி.சிவசரவணபவன்(சிற்பி) தலைமை வகிப்பார்.

'அட்சரபோதினி' (சமஸ்கிருத பாலபாடம்), 'மறுமலர்சி கண்ட மாணிக்கம்' (ச.ப.சர்மாபற்றிய ஆய்வு நூல்) ஆகிய இரண்டு நூல்களும் விழாவில் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

கோப்பாய் பிரதேச செயலர் சி.கேதீஸ்வரன் இவ்விழாவில சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வே.சந்திரசேகரம்பிள்ளை, செ.விஸ்வலிங்கம் ஆகியோரின் பாராட்டுரைகள், ஓய்வுபெற்ற அதிபர் க.இ.குமாரசாமியின் அறிமுக உரை, ஆசிரியமணி அ.பஞ்சாட்சரத்தின் நயப்புரை என்பனவும் -

பிரம்மஸ்ரீ க.இலட்சுமண ஐயரின் (இலங்கை வங்கி, மானிப்பாய்) வெளியீட்டுரையும் இடம்பெறும். (ஐ-15)

# பட்டதாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்து பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காத பட்டதாரிகளை நேர்முகப் பரீட்சைக் கடிதத்துடனும் -

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் கிடைத்து இது வரை நியமனத்தைப் பெறாதவர்கள் நியமனக் கடிதத்துடனும் -

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தமது சங்க அலுவலகத்திற்கு சமூகம் தரும்படி யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (ஐ-3)

---


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழமண்ணில் மலர்வு 11 - 06 - 1960



கனடாவில் உதிர்வு 24 - 04 - 2000

அமரர்

இராசையா இரவீந்திரன்

திதி: 13-05-2001

எங்கள் இதய தெய்வமே!
அரவணைக்க உமைப் போல் ஒருவரில்லை
உமைப்பிரிந்து கண்ணீரில் துடிக்கின்றோம்
கவலை போக்க வாருமையா!

பெற்றோர், உடன்பிறந்தோர்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

பழைய பொலிஸ்நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு.

தகவல்:
திருமதி செல்வராணி தியாகலிங்கம.

(87643)



# ST.JOHN'S COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING 2001

Saturday the 19th May 2001
At 10. a.m.

CHIEF GUEST
**Professor Rajaratnam Kumaravadivel**
Senior Professor of Theoretical Physics
Dean - Faculty of Science
University of Jaffna.
&
**Mrs. Rajini Kumaravadivel**

CHAIRMAN
**Rev.S.P.Nesakumar**
Rural Dean - Jaffna.

**Parents, Old Boys & Well- wishers are Cordially invited.**

(C/16564)

*Principal, Staff and Students.*

## களுத்துறை சென்ற சட்டசேவைக் குழுவிடம்

# விசாரணைக்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு கைதிகள் கோரிக்கை

கொழும்பு,மே13

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் என்பவற்றின்கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் எழுபது கைதிகள் தங்களை விசாரணை செய்ய துரித நட்வடிக்கை எடுக்கும் படி நீதியமைச்சின் சமூக, சட்ட சேவைக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நீதியமைச்சரும், சட்டவிரோதக் கைதுகள் மற்றும் இம்சைகள் தவிர்ப்புக்கான ஜனாதிபதிக்குழுவின் தலைவருமான பட்டி வீரக்கோனின் பணிப்புரைக்கமைய சமூக, சட்ட சேவைக் குழுவின் பிரதிநிதிகள் கடந்தவாரம் களுத்துறை சிறைச்சாலைக்கு நேரில் விஜயம் செய்தனர். அச்சமயமே மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் எழுபது பேர் மேற்படி கோரிக்கையை விடுத்தனர்.

எமக்கு சட்டத்தரணிகள் வைத்து வாதிடக்கூடிய வசதிகள் இல்லை. நாம் வறியவர்கள். அதனால் தங்கள் குழுவினூடாக எம்மை விசாரித்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கைதிகள் கேட்டுக்கொண்டனர்.

நீதியமைச்சின் சமூக, சட்ட சேவைகள் குழுவினர் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மேற்கொண்ட விஜயம் குறித்த அறிக்கையை நாளை திங்கட்கிழமை சட்டவிரோத கைதுகள் மற்றும் இம்சைகள் தவிர்ப்புக்கான ஜனாதிபதிக் குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளனர் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

### ஐ.நா.செயலாளருடன் அனுரா பேச்சு

நியூயோர்க்,மே13

ஐ.நாவின் தலைமை அலுவலகத்துக்கு கடந்த திங்கட்கிழமை விஜயம் செய்த.சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா செயலாளர் கோபி அனானைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இனப்பிரச்சினை விவகாரத்தின் தற்போதைய நிலைமை, தொடரும் மோதல்கள் மற்றும் நோர்வேயின் சமாதான முயற்சிகள் குறித்து அவர்கள் கலந்துரையாடினர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-4)





யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் கடந்த 8ஆம் திகதி சட்டவிரோத மது உற்பத்தி விற்பனைக்கு எதிரான மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் யாழ்.மாவட்ட நீதிபதிகள், அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள், மதகுருமார், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், மாணவப் பிரதிநிதிகள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த. விக்னராசா உரையாற்றுவதையும், ஏனைய பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

மாநாட்டின் இறுதியில் அதில் கலந்துகொண்ட பிரதிநிதிகளை உள்ளடக்கி 'சமுதாய விழிப்புணர்வு ஆலோசனைக்குழு'வும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

(படங்கள்: றோய் மதிவதனன்)

## நடை உடை பாவனையில் நற்றமிழ்ப் பெண்ணாய் வாழ்க!

வாடி அம்மா! தமிழ் மகளே!
வருந்தியே எழுதுகின்றேன்
தேடியே உனை அலைந்தேன்
திருமகளே! சேதி கேளாய்!
கூடியே உன் முன்னோரெல்லாம்
குவலயம் வியக்க வாழ்ந்தார்.
ஆடியே பாடி நாளும்
அக மகிழ்ந்துவகை பூத்தார்.
விடிய முன் கண் விழித்தே
விருப்புடன் நீரும் ஆடி
பாடியே திருவெம்பாவை
பரமன் தாழ் பணிந்து பின்னே
படியிலே மா கோலம் தீட்டி
பரவசமடைந்தாரன்றோ?
விடியலை கண்ணால் காணா
வித்தகி ஆகி விட்டாய்!
படித்து நீ படுக்கை நண்ண
பன்னிரண் டடிக்குதம்மா!
அடித்தன்னை தந்த கோப்பி
அப்படியே குடித்துவிட்டு
இடித்த மா இடியப்பம் கூட
இருந்துண்ண நேரமின்றி
தடித்து நீ எழுந்து ஓடி
தவிச் சக்காத்திலேறி
படித்திடும் பள்ளிப் பாடம்
போதாது என்று தானோ
இடிபட்டு இடம் பிடிக்க
ஓடுகிறாய் "ரியூசன்" நோக்கி
'ஓடிறாய்' சயிக்கிள் ஓட்டம்
ஒருவர்க்கும் வழிவிடாமல்
நாடியே அப்பன் தந்த
நற் சீதனமோ! தெரு உனக்கு?
கூடியே பஜனைக் கோஷ்டி
கூட்டமாய் போதல் போல
வாடி நீ! போடி! என்று
வம்புகள் பேசிக் கொண்டு
போடி நாலு(D)டி உனக்கு
போதாது எனக்கு(D)டி என்கிறாயே!
இடிபட்டு நீ தெருவில் வீழ்ந்தால்
இழிவதும் தமிழ்த் தாய்கன்றோ?
துடி இடையாளே! உன்னை
தூற்றிறேன் என எண்ணிடாதே
படித்து நீ பட்டம் பெற்று
பாங்குடன் உயர வேண்டும்
கடிகமழ் தமிழ்த் தாயாளை
காப்பவள் நாளை நீயே!
விடிவதும் நாடு பெற்று
விமோசனம் காணும் போது
அடிபணிந்து தமிழ்த் தாயாளை
அலங்கரிக்கும் அன்னை நீயே!
அடிபட்டுப் போன தெங்கள்
அருந்தமிழ் பண்பாடேயென்றால்
துடிதுடித்து எங்கள் அன்னை
துயரிலே துடிப்பாளன்றோ?
அடிமை வாழ்வகலும் போது
அரும் பண்பாடழியுமென்றால்
கடிமணப் பந்தல் தன்னில்
கன்னி மாண்ட கதையது ஆகுமன்றோ??
விடிவது கிட்டும் நங்காய்
வீண்துயர் விடுதி இன்றே
நடைஉடை பாவனையில்
நற்றமிழ்ப் பெண்ணாய் வாழ்க!

முடி.திருநாவுக்கரசு
(ஓய்வு பெற்ற நீதிபதி)

## கோவலனுக்கு மாதவி வரைந்த கலையம்சம் மிக்க காதற் கடிதம்

இலக்கியச்சோலை

உதங்கா

காதல் உணர்வு விளங்கவைப்பதொன்றல்ல. காதல் வசப்படாதார் யாவர்? மலர்கள் காதலிக்கின்றன. மரங்கள் காதலிக்கின்றன. மயில்கள், மாடப்புறாக்கள், சிங்கம், புலி, கரடி, பூச்சி புழுக்கள் அனைத்தும் காதல்வயப்படவே செய்கின்றன. காதல்வயப்பட்டாரும், காதலில் வஞ்சிக்கப்பட்டாரும் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் கணக்கில் அடங்கா, எழுத்திலும் அடங்கா, எண்ணத்திலும் அடங்கா. காதல் முதிர்ந்து கலியாணமாகி இடையில்ஒருவர் துரோகம் செய்யின் செய்யநினைத்ததாக மற்றவர் சந்தேகம் கொண்டாற் கூட அதன் விளைவு பிரிவு. போர்வையின பிரிவு, பொருள்வையின் பிரிவு, ஓதற் பிரிவு எனத் தலைவியைத் தலைவன் பிரிதல் வழக்கம். ஆனால் இப்பிரிவோ நிரந்தரம்.

குடிமக்கள் காப்பியம் என்று ஆதி காப்பியமாக அமைவது சிலப்பதிகாரம் கண்ணகியைக் கோவலன் மணம் புரிகின்றான். காதல் மணமல்ல. ஆனால் மாதவி கோவலன் வாழ்வோ காதல்வயப்பட்டது. பரத்தையர் குலத்தவள ஆயினும் மாதவி விலைமகள் போல விலை போகவில்லை. காதலனாகிய ஒருவனையே உன்னி உள்ளத்தில் இருத்த கற்பொழுக்கம் பேணி வந்தவள்.

இந்திர விழா வந்தது. வானவர் முதற் தானவர் வரை புகாரிற் கூடினர். தேவரும் பிறரும் உருக்கரந்து வந்து கண்டுகளிக்கும் களியாட்ட விழா அது. மாதவி ஆடிய பதினொருவகை ஆடல்களை விஞ்சயன் ஒருவன் தன் காதலிக்குக் காட்டி மகிழ்ந்தான். பலர் முன் ஆடிய மாதவியுடன் கூடினான் கோவலன். அவனது ஊடலைத் தணித்தாள் மாதவி. ஆனால் கோவலன் உள்ளூர மனம் ஆறவில்லைப் போலும் யாழை மீட்டி கானல் வரி பாடினான அதில் அவன் உள்ளத்து நிலைபெற்றா வேறோர் மாதினைப் பற்றிய குறிப்புள்ளது என நினைத்து உள்ளத்திலே ஊடினாள் மாதவி. தானும் வேறோர் குறிப்பினை உடையவள் போல் அந்நிலத் தெய்வமாகிய வருணனும் வியப்படையும் வண்ணம் தன் இனிய குரலிற் பாடினாள்.

கோவலன் வெகுண்டனன் யான் கானல்வரி பாடினேன் வஞ்சனையுடன் கூடிய இவளோ தான் வேறொன்றின் மேல் மனம் வைத்துப்பாடினாள். தன்கையினுள் கைவைத்திருந்த மாதவியின் கையை அகற்றி தனியே எழுந்து சென்றான்.

அவனது செல்வம் இவ்வேளையிற் தேய்ந்திருந்தது. இது அவளது பரததமைக் குலத்தை அவன் மனக்கண் முன்னே கொண்டுவந்தது. மாதவியில் மாதவியைக் கண்டிருப்பான் ஆயின் அவளை விட்டுப் பிரிந்திருக்கமாட்டான். மாதவி தனியே தன் மாளிகை சென்றால் தன் வேதனைகளை திருமுகமாக எழுதித் உயிர்த்தோழி வசந்த மாலையிடம் கொடுத்தனுப்புகிறாள்.

*சண்பகம் மாதவி*
*தமாலம் கருமுகை வெண்பூ மல்லிகை,*
*வேரொடு பிடைந்த அம் செங்கழுநீர்,*
*ஆய் இதழ்கி கத்திகை எதிர் பூஞ் செவ்வி*
*இடைநிலத்து யாத்து முதிர் பூந் தாழை*
*முடங்கல் வெண் தோட்டு விரைமலர் வாளியின்*
*வியல் நிலம் ஆண்ட ஒரு தனிச் செங்கோல்*
*ஒரு மகன் ஆணையின் ஒரு முகம் அன்றி,*
*உலகு பொழுதிறைஞ்சும் திருமுகம் போக்கும்*
*செவ்வியன் ஆதி அலத்தகக் கொழுஞ் சேறு*
*அளை இ. அயலது பித்திகைக் கொழுமுகை*
*ஆணிகைக் கொண்டு எழுதினாள்.*

அழகிய மாலை ஒன்றை பலவித மலர்களாலும் மணம் நிறைந்த பச்சிலையாலும் புனைந்து அதனுள் தன் நெஞ்சத்து உணர்வுகளை எல்லாம் நிறைத்து எழுதினாள். ஆனால் கோவலன் அடித்தடுத்து அவள் மயக்கிய மயக்கமும் அவளது நாடகமும் நான் அறியாததல்ல. என் பொருளும் இழந்தேன் எல்லாம் நாடகமேயன்றி அவளுக்கு என்மேற் காதலேதுமில்லை என்று மறுத்தான்.

தனித்தமிழ் இலக்கியத்தில் இது போன்று பிறிதொரு கடிதம் எங்குமே இல்லை இதுவே ஒரே ஒரு கடிதம் ஆகும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Broilers, Cullbirds, Cockerels** இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (87635)

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம் மற்றும் லவ்பேட்ஸ் விற்பனைக்குண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (87325)

புறொயிலர் **(BROILER)** விற்பனைக்கு உண்டு. 1 கிலோ 170/- **(NET WEIGHT 1kg 260/-)** வாடிக்கையாளர்களுக்கு மேலும் விசேட விலைக் கழிவு உண்டு. விறாத்துக் குஞ்சு ஒன்று 120/=. தொடர்பு: 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(87657)

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் தினந்தோறும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: J.தாமிரா, 36/1, ஆசீர்வாதப்பர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். **T.P.**3649. (87708)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினந்தோறும் சுத்தம்செய்து பெற்றுக் கொளளலாம். தொடர்பு: சங்கீத் 40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, (கலவியங்காட்டுச் சந்தை அருகில்) (87698)

**BROILER** இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. விலை 1கிலோ 160/= தொடர்பு: கே.கே.எஸ். வீதி, சிவன் கோயிலடி (334ஆம் இலக்க வீட்டில், குணம் கொத்துரொட்டிக் கடைக்கு அடுத்த வீடு) (87714)

இறைச்சிக்கோழி **(Broliers)** விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (87712)

## புறொயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி **(BROILER)**, கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (87188)

## தவறிவிட்டன

குமரகோட்டம், கோண்டாவில் என்ற முகவரியைச் சேர்ந்த வைத்திலிங்கம உலகநாதன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.480212339V), விசேட அடையாள அட்டை (இல.0902023959) என்பன கோண்டாவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (87684)

தாவடி வடக்கு, கொக்குவில் என்ற முகவரியைச் சேர்ந்த பொன்னுத்துரை மதிவதனன் என்பரது விசேட அ.அட்டை (இல.0906022977) கடந்த 10.05.2001இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கஜலட்சுமி ஜுவல்லறி, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் (துரை வீதிச் சந்தி) என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (87720)

## சனி, செவ்வாய் மாற்றம்

சித்திரைப் புத்தாண்டு பலாபலன்கள் ரூபா 10/= எங்கும் விற்பனையாகின்றது. ஜீவன்-பிரம்மம் ஐக்கிய வேதாந்த ரகசியம் (நூல் அறிமுகம் அடங்கியது) எழுதியவர் சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. **T.P.** 021/2753. (87719)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் கார் (10ஏ) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ந.பாலவிநாயகர், இல. 173, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். **T.P.No.** 2448. (87594)

## வீடுவளவு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, பூதர் மடத்தடி, பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட (3 1/2 பரப்பு) வீடுவளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.மனோகரன், மனோலைந, கோப்பாய். (87599)

## விற்பனைக்கு

புறொயிலர் கோழிகளும், முட்டைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள "அண்ணா" ஸ்ரேஷன் றோட், இணுவில். **(C/16641)**

**1C, 2C JAPAN ENGINE** விற்பனைக்கு உண்டு. 504, 404 காருக்கு டீசல்.என்ஜின் பொருத்திக் கொடுக்கப்படும். (குறைந்த கட்டணத்தில்) மற்றும் **OXFORD ENGINE,** பெற்றோல், டீசல் என்ஜின், கேம்பிறிச் என்ஜின், மைனா என்ஜின், **SPARE PARTS** உம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுககு:- இல.806, முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம். (87648)

மர.அலுமாரிகள், சிங்கர் தையல் மெசின், பீங்கான் கோப்பைகள் (டினர்செற்), எவர் சில்வர் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தனபாலசிங்கம், 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். நேரம் காலை 8 மணி தொடக்கம் பகல் 12 மணி வரைக்கும். (87605)

நல்ல நிலையிலுள்ள பாவித்த **REMINGTON** ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2037** (87555)

மின்சார உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், வீட்டுத் தளபாடங்கள் மற்றும் பொமேரியன் பெண் நாய்க குட்டி (45நாள்) விற்பனைக் குண்டு. தொடர்பு:- 55, பலாலி வீதி, கந்தர் மடம். (87677)

**GESTETNER** றோணியோ இயந்திர உதிரிப்பாகங்கள், இம்பிரேசன் றோலர், **STEEL** பெலிட், ஸ்கிறின் பேப்பர் பீடர், **STENCEL** கொல்டர்பார் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: **R.**மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (87717)

நல்ல நிலையில் உள்ள ஐஸ்பழ மெசினுக்குரிய கொம்பிறசர் **(BITZER TYPE II, GERMANY)** ருக்மணி கபஸ் வானுக்குரிய பெற்றோல் எஞ்சினும், கடைப்பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரிகளும் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: கோகுலன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (87718)

குளிர்சாதனப் பெட்டி (2 கதவு), றெமிங்டன் தமிழ் தட்டச்சு இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 75, மானிப்பாய் வீதி, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். (87725)

## திருமண சேவை

பயிற்றப்பட்ட ஆசிரியர், எலற்றிசன், பட்டதாரி, எஞ்ஜிசினியர், தனியார் தொழில், லண்டன், ஜேர்மனி பிரஜாவுரிமை உள்ளவர்களுக்கு மணபெண்கள் தேவை. கிறிஸ்தவ மணமக்களும் உண்டு. திருப்தியானதும் துரிதமானதுமான சேவைக்கு தொடர்பு: கு.திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (87685)

## (O/L) MATHS 2C01

புதிய பழைய கணித பாடத்திட்டத்துக் கமைய ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இது வரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் **Distinction** பெறுமேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், இல.10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (87681)

## தவறிவிட்டது

இல. 408, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த வினிதா இராஜரட்ணம் என்பவரது தேசிய அ.அ.(இல.798560921**v**), வி.அ.அ.(இல.0901006272) என்பன யாழ். பிரதான வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.408, பிரதான வீதி, சங்கர் கொமினிகேசனில் ஒப்படைத்துதவவும். (87713)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இளமைத் தோற்றமுள்ள உயரம் 5' 8" உடைய 11 வருடங்களாகச் சுவிற்சிலாந்தில் தொழில் புரியும் (**Sponsor** வசதி உண்டு) விரைவில் கனடா செல்லவுள்ள 43 வயது மணமகனுக்கு 35, 36 வயதுக்குட்பட்ட உயரமான மணமகளைத் தாயார் எதிர்பார்க்கின்றார். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விள இல. 1281, **c/o** உதயன், யாழ்ப்பாணம். (87525)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளையும் கொண்ட சிறிய வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: புதிய இல.608, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.. **T.P.**021-2913. (87706)

## வேலையாள் தேவை

கோழிகள், பூந்தோட்டம் பராமரிப்பதற்கு ஆள் தேவை. அத்துடன் **Packing** செய்வதற்கு ஒரு பெண் பிள்ளையும் தேவை. உடன் நேரில் வரவும். தொடர்பு: 19, முகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (87709)

## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கில் நவரத்தினம் (நகுலர் மாஸ்ரர்) வீட்டுக்கு அருகில் இருக்கும் வீடு கட்ட உகந்த கிணற்றுடன் இருக்கும் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தன பாலசிங்கம், 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். காலை 8.30 முதல் பகல் 12.00 மணி வரை. (87604)

## ஒரு காதலின் கதை

நீங்கள் கதிர்காமம் போயிருக்கிறீர்களா? அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை ஒரு கொழும்பு வார மலரில் எழுதும் ஒரு காதலின் கதையின் இந்த வாரக் கதையை வாசித்துப் பாருங்கள்! கதிர்காமம் போனது போலிருக்கும். (87670)

## குடும்பஸ்தர் தாக்கப்பட்டுக் காயம்

யாழ்ப்பாணம், மே13

மீசாலைப் பகுதியில் வியாழன் இரவு 7 மணியளவில் தாக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த குடும்பஸ்தரான குமாரசாமி நவரத்தினம் (வயது-54) என்பவரே முகத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா ஆஸ்பததிரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-6)

## சிரமதானம்

கோப்பாய், மே13

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாம் ஆண்டு நினைவு விழாவை ஒட்டி அவ்வளாகம் தற்போது அமைந்துள்ள கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் கல்வியியல் கல்லூரி மாண்வர்களும் கலாசாலை மாணவர்களும் இணைந்து சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்துள்ளனர். (ஜ-72)

# ஆனைக்கால் நோயைத் தடுக்க மருந்து வழங்கும் திட்டம்

ஆனைக்கால் நோய் இலங்கையில் பெரும் சுகாதார அச்சுறுத்தலாக மாறி வருகிறது. இந்த நோயிலிருந்து நாட்டு மக்களைக் காபாற்றுவதற்காக எதிர் வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் இதற்கான நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இத்தடுப்பு மருந்தை நாட்டு மக்கள் அனைவரும் குறித்த தினங்களில் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நோய் ஒழிப்பு மருந்து வழங்கும் திட்டத்தை சுகாதார அமைச்சு, ஆனைக்கால் நோய் ஒழிப்பு இயக்கம் மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகியன கூட்டாக இணைந்து செயற்படுத்தவுள்ளன.

கடந்த ஆண்டு 7 லட்சத்து ஆயிரத்து 834 பேருக்கு இந்த நோய்க்கான இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் ஆயிரம் பேர் நோயாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இந்நோய்க்கு ஆளாவோரின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. மரணத்தை ஏற்படுத்தாத நோயாக இது இருந்தாலும் உடலில் விகாரங்களை ஏற்படுத்தக் கூடியது. இலங்கையில் வட மேல் மாகாணம், மேல் மாகாணம், மற்றும் தென்மாகாணம் ஆகியவற்றில் வசிகின்ற 95 லட்சம் மக்கள் இந்நோயினால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீமத் விராட் விஸ்வப் ப்ரஹ்மனே நம!

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 05 - 05 - 1940



அஸ்தமனம் 09 - 05 - 1996

திருமதி

## யோகேஸ்வரி பாலகிருஷ்ணன்

ஆண்டுகள் ஐந்து பறந்தோடி விட்டன!
நினைவுகள் மட்டும் நிழலாடுகின்றன.
நெஞ்சம் இருக்கும் வரை உங்கள் நினைவுமிருக்கும்

*ஆத்மா சாந்தி அடையட்டும்!*

*65/01, நாயன்மார் வீதி, நல்லூர்*
(87721)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# MICRO PC SYSTEMS

## SPECIAL OFFER

**MIPAQ PENTIUM III 733 MHZ**

- Gigabyte Main Board.
- 64 MS Ram
- 20.4 GB HDD
- 8 MB AGP
- 14". Monitor
- ATX Power
- PS/2 KEY board & Mouse
- 52X CD-Rom
- 32 Bit Sound Card, Speakers 340W
- 56 K Modem

**MIPAQ CELERON 566 MHZ**
*With above configuration*

**MIPAQ CYRIX 333 MHZ**

**OFFER VALID TILL STOCK LAST**

**Free Internet Connection**

☆ திருமண வைபவங்கள்
☆ நிகழ்வுகள்
☆ மறக்க முடியாத நிகழ்வுகள்
அனைத்தும் மிகக் குறைந்த விலையில் வீடியோ கசட்டில் இருந்து CD க்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

Rs. 500.00

***Tamil MP3 CD'S, Software CD'S***
மிகக் குறைந்த விலையில்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட
தமிழில் SOFTWARE
தமிழில் Word
"பதமி"
"குறளமுது"
"அறிவோடு விளையாடும்"

MPAQ



யாழ்.நகரில் Computer ஐ பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்க. 077-315271

*Sole Agent For MIPAQ Computers In SRI Lanka*

MICRO PC SYSTEMS

*Head office, No.15,36th Lane, Wellawatte, COLOMBO - 06*
*T.P.074-513235, 074-516764,*

**Branch:**
*No 9,MODERN MARKET, HOSPITAL ROAD, JAFFNA.* (C16678)

# தமிழகத் தேர்தல் முடிவு இன்று வெளியாகும்

## தலைவர்களின் தலைவிதி தெரியவரும்

சென்னை, மே 13

தமிழக அரசியல் வாதிகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகும் சட்டசபைத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது.

தமிழகம் முழுவதிலும் 101 மையங்களில் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது. காலையில் வாக்கு எண்ணிக்கை தொடங்கி 3 மணி நேரத்துக்குள் முதல் முடிவு தெரிய வரும் என்றும் —

பிற்பகல் 2 மணிக்குள் அனைத்து முடிவுகளும் வெளி வந்து விடும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை வாக்குப் பதிவு நடைபெற்ற சமயத்தில் குளறுபடிகள் நடைபெற்றதாகக் கூறப் படும், சென்னைத் துறைமுகம், அருப்புக்கோட்டை வேலூர், ஸ்ரீபெரும்புதூர், விழுப்புரம், தூத்துக்குடி, மற்றும் திருச்சி நாடாளுமன்றத்தொகுதி ஆகியவற்றில் உள்ள தலா ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களில் நேற்று மறுவாக்குப் பதிவு நடத்தப்பட்டது.

இவை தவிர, மேற்கு வங்கத்தில் 90 இடங்களிலும், அசாமில் 206 இடங்களிலும் மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவிடப்பட்டது.

தமிழக சட்டசபைத் தேர்தல் வரலாற்றில், மிகக் குறைந்தளவாக, 59 05 சதவீதத்தினரே இந்தத் தடவை வாக்களித்துள்ளனர்.

(ஒ-7)

# பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் பிளேயருக்கு வெற்றிவாய்ப்பு



லண்டன், மே 13

பிரிட்டனில் அடுத்த மாதம் நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராகும் வாய்ப்பு டொனி பிளேயருக்கு அதிகம் உள்ளது.

'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரிய வந்துள்ளது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் 179 ஆசனங்களைப் பெற்றுள்ள பிளேயரின் தொழிற்கட்சி, எதிர் வரும் தேர்தலில் 250 இடங்களைப் பெறக் கூடும் என்றும் —

இதன் மூலம் தற்போதைய பிரதமர் டொனி பிளேயரே மீண்டும் பிரிட்டிஷ் பிரதமராக ஆட்சியில் அமர்வார் என்றும் —

கருத்துக் கணிப்பு முடிவுகளில் தெரிய வந்துள்ளன. இந்த மாதம் நடைபெறவிருந்த பிரிட்டிஷ் பொதுத் தேர்தல், ஒத்திவைக்கப்பட்டு அடுத்த மாதம் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது தெரிந்ததே.

# இன்னும் இருபது ஆண்டுகளில் செவ்வாயில் மனிதன் காலடி

## 'நாஸா'வின் தலைவர் நம்பிக்கை

வாஷிங்ரன், மே 13

அடுத்து வரும் 20 ஆண்டுகளுக்குள் மனிதன் செவ்வாய்க் கிரகத்தில் காலடி பதிப்பான் என்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாஸா' வின் தலைவர் டானியல் கொல்வின் தெரிவித்தார்.

அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

செவ்வாய்க் கோளில் நிலத்தடி நீர் இருப்பதைக் கண்டறிய அமெரிக்காவின் 'ஒடிசி' விண்கலம் வினாடிக்கு 30 கிலோ மீற்றர் வேகத்தில் செவ்வாய்க் கிரகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகக் கொல்வின் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டுக்குள் செவ்வாய்க கிரகத்தின் மேற்பரப்பில் மாதிரிகளைச் சேகரிப்பதற்கான விண்கலம் ஒன்றை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஒ-4)

# '189 நாடுகளைத் தண்டிக்க வேண்டாம்'

# நிலுவை குறித்து அமெரிக்காவிடம் கோபி அனான் வேண்டுகோள்

நியூயோர்க், மே 13

ஐ. நாவுகுச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை



யைச் செலுத்தாமல் இருப்பதன் மூலம் ஐ நாவில் அங்கத்துவம் வகிக்கும் 189 நாடுகளைத்தண்டிக்க வேண்டாம் என்று அமெரிக்காவுக்கு ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வியாழனன்று நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெறுவதற்கான தேர்தலில் அமெரிக்கா தோல்வியடைந்தது. இதனால் மனித உரிமை ஆணைக் குழுவின் அங்கத்துவத்தை முதல்முறையாக அமெரிக்கா இழந்தது.

இதனையடுத்துஐ.நாவுக்குச் செலுத்த வேண்டிய அங்கத்துவக் கட்டணமான பல மில்லியன் டொலர்கள் நிலுவையைச் செலுத்தப்போவதில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதனால் அதிர்ச்சியுற்று கோபி அனான் நிலுவைத் தொகையைச் செலுத்தும் படியும் —

அத்தொகையைக் கட்டாமல் இருப்பதன்மூலம் ஐ. நாவின் செயற்பாடுகளைச் சீர்குலைக்க வேண்டாம் என்றும் —

அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப் பணத்தைச் செலுத்தாமல் இருப்பதன் மூலம், மற்றைய அங்கத்துவ நாடுகளுக்கு உதவும் ஐ நாவின் செயற்பாடுகளுக்கு முட்டுக் கட்டையிட்டு அந்த நாடுகளைத் தண்டிக்க வேண்டாமெனவும் கோபி அனான் கோரி உள்ளார்.

(ஒ-4-7)

### ஈரானியத் தலைவர்களிடம்

# அமெரிக்காவைத் தோற்கடிக்க உதவி கோரும் காஸ்ட்ரோ

தெஹ்ரான், மே 13

அமெரிக்கா ஏகாதிபத்தியத்தை தோற்கடிப்பதற்கு உதவுமாறு கியூபா அதிபர் பிடல்காஸ்ட்ரோ ஈரானியத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அதிபர் காஸ்ட்ரோ, தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும் போதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அமெரிக்காவின் இராணுவத் தளங்களும், விமானந் தாங்கிக் கப்பல்களும் உலகெங்கும் பரவலாக நிலை கொண்டிருப்பதாகவும் —

அனைத்து திசைகளையும் குறிவைத்து அணுவாயுதங்கள் அங்கு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் காஸ்ட்ரோ குறிப்பிட்டார்.

22 வருடங்களுக்கு முன்னர் மன்னராட்சியைத் தூக்கியெறிந்த ஈரானால் அமெரிக்காவைத் தோற்கடிக்க முடியும் என்றும் காஸ்ட்ரோ தெரிவித்தார்.

அதிபர் காஸ்ட்ரோவின் கோரிக்கையை ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி கொமெய்னி வரவேற்றுள்ளதாக ஈரானியத் தொலைக்காட்சி தெரிவித்தது.

இஸ்லாமிய ஈரானும், கம்யூனிச கியூபாவும் வெவ்வேறு சித்தாந்தங்களைக் கொண்டிருந்தாலும் அமெரிக்காவை இரு நாடுகளுமே பொது எதிரியாகக் கருதுவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-4-7)

# போட்டோரிகோ அழகிக்கு 'மிஸ் யூனிவேர்ஸ்' பட்டம்

சான்யுவான், மே 13

இந்த ஆண்டின் மிஸ் யூனிவேர்ஸ்' உலக அழகிப்போட்டியில் மத்திய அமெரிக்க நாடான போட்டோரிகோவின் 20 வயது டெனிஸ் குயினிஸ் ஆகஸ்ட் பட்டம் வென்றார்.

போட்டோரிகோவின் தலைநகர் சான் யுவானில் கடந்த 11 ஆம் திகதி இரவு நடைபெற்ற 77 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்ட உலக அழகிப் போட்டியில், இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிரேக்க அழகி எவலினா, அமெரிக்க அழகி காண்டாஸ் குருகள் ஆகியோர் முறையே இரண்டாவது மூன்றாவது இடங்களைப் பெற்றனர்.

இந்தியா சார்பில் உலக அழகிப் போட்டியில் கலந்து கொண்ட செலினா, ஜெய்ட்லி ஐந்தாவது இடத்தைத் தான் பிடிக்க முடிந்தது.

(ஒ)

# கானா உதைபந்தாட்டத் திடலில் சனநெரிசலால் 120 பேர் பலி!

அக்ரா, மே 13

ஆபிரிக்க நாடான கானாவில் உதைபந்தாட்டப் போட்டியொன்றின் போது, மைதானத்தில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி சுமார் 120 பேர் உயிரிழந்தனர்.

கடந்த புதன்கிழமை உள்ளூர் அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போதே,இந்த விபரீதம் இடம்பெற்றது.

போட்டியில் கலந்து கொண்ட இரு அணிகளில் ஒன்று இறுதி நேரததில் இரு கோல்கள் அடித்து வெற்றி

உலக அரங்கில்

பெற்றதாகவும்—

இதனையடுத்து,இரு அணிகளினதும் ரசிகர்களிடையே கைகலப்பு ஏற்பட்டதால், அதனை அடக்கப் பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகித்ததாகவும் — கூறப்படுகிறது.

இதிலிருந்து தப்பித்துக் கொள்ள ரசிகர்கள் முயன்ற சமயத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 120 பேர் இறந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் 50 பேர் வரை காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதகாலத்தில் உதைபந்தாட்ட மைதானங்களில் ஏற்பட்ட மூன்றாவது விபத்து இதுவாகும்.

முன்னதாக ஈரானிலும், தென்னாபிரிக்காவிலும் இது போன்ற விபத்துக்களில் பல உயிரிழப்புகள் ஏற்பட்டன.

# இந்தியாவில் வெப்பத்துக்கு 13 பேர் பலி!

புதுடில்லி, மே 13

இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் கடும்வெப்பத்தால் பாதிப்படைந்துள்ளன

ஒரிசா, ஆந்திரா, மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இதுவரை 13 பேர் வெப்பத்துக்குப் பலியாகியுள்ளனர்.

தலைநகர் புதுடில்லியில் மிக அதிக அளவாக 44 5 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

# இந்தியப் பிரதமர் மலேசியா விஜயம்

புதுடில்லி, மே13

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் 4 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மலேசியா செல்ல உள்ளார்.

# உலகமகா யுத்தகாலக் குண்டு வெடித்ததில் சிறுவன் மரணம்!

## இந்தோனேசியாவில் சம்பவம்

ஜகார்த்தா, மே 13

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது கைவிடப்பட்ட குண்டொன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

இந்தோனேசியாவின் புளோரஸ் தீவில் இந்தப் பரிதாபச் சம்பவம் நிகழ்ந்தது.

இங்குள்ள ஆற்றங்கரையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், ஆற்று மணலில் புதைந்து கிடந்த குண்டைக் கண்டெடுத்தனர். ஒரு பந்தென்றுகருதி அதனை வைத்து அவர்கள் விளையாடியுள்ளனர்.

அப்போது அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில அந்தக் குண்டு விழுந்ததாகவும்—

அதனைச் சிறுவர்கள் மீட்க முனைந்தபோதே அக்குண்டு வெடித்ததாகவும் கூறப்படுகிறது.

1939-45 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலப் பகுதியில் புளோரஸ் தீவு ஜப்பானியப் படைகளின் வசம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-7-4)

# சனத்தொகை அதிகமான நாடுகள்

உலகில் சனத்தொகை அதிகமான நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடம் வகிக்கிறது. இந்தப் பட்டியலில் இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா, பிரேஸில் ஆகியவை அடுத்த 4 இடங்களிலும் உள்ளன.

# சீனப் பிரதமர் பாகிஸ்தான் விஜயம்

இஸ்லாமாபாத், மே 1௳

சீனப்பிரதமர் குப்ரோங்கி பாகிஸ்தானுக்கு 4 நாள்கள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தையொட்டி, பாகிஸ்தானும், சீனாவும் 7 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன.


# வீதி ஒழுங்கு குறித்த கைந்நூல் ஒன்று வெளியீடு

பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, மக்கள் நலன்புரிச் சங்கப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவினரால் வீதி ஒழுங்கு தொடர்பான கைந்நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

குடாநாட்டில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வருகின்ற வீதி விபத்துகளுக்குப் பாடசாலை மாணவர்களும் ஒரு வகையில் காரணமாக உள்ளனர் என்பதைக் கருதிற் கொண்டு, மக்கள் நலன் புரிச்சங்கப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவினரால் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பல நடத்தப்பட்டன. மாணவர்கள் வீதிக் கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதன் வெளிப்பாடாகவே கைந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கைந்நூலின் முதற்பிரதியை யாழ். செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரும், யாழ். மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளருமாகிய நா. சிவபாதசுந்தரம் அண்மையில் வெளியிட்டு வைத்தார். யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முத்து இரத்தினம்

திதி: சஷ்டி 13 - 05 - 2001

தோற்றம்: 1919 - 07 - 24 மறைவு: 1998 - 04 - 17

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
சகோதரி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

'இரத்தின மஹால்',
பிரதான வீதி,
சங்கானை.

(87690)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 — 06 — 1924



இறப்பு 07 — 05 — 1999

### திருமதி கந்தையா ராசமணி

திதி: 13-05-2001

சீரோங்கு வழிகாட்டி சிந்தை நல் உயர்வாக்கி
பார்போற்ற வாழ்ந்த தாயே! பண்புருவே
எம் திருவே!
ஈராண்டு அகன்றதம்மா இழந்த உன்
இன்னலெண்ணி
ஆரோடு நோவோம் இனி? — உம்
அழகாத்மா சாந்தி! சாந்தி!!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

5, பென்ரிக்கோஸ்ரல்
ஒழுங்கை,
கண்டி.வீதி, யாழ்ப்பாணம்.
T.P — 2739

(87730)

# விமான சேவை பாதுகாவலருக்கு விசேட கொமாண்டோப்பயிற்சி

கொழும்பு, மே 13

இலங்கை விமான சேவையினர் தமது பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு இராணுவ கொமாண்டோ பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

விமான சேவையின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் விசாரணைப் பிரிவினர் 30 பேர்களுக்கு அண்மையில் இராணுவ கொமாண்டோப் பிரிவினால் கொமாண்டோப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கட்டுநாயக்க விமான நிலையப் பகுதியில் வைத்தே இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஆயுத பாணிகளின் தாக்குதல்களை முறியடிப்பது, குழப்பம் விளைவிக்கும் பிரயாணிகளைக் கட்டுப்படுத்துவது, நாடு கடத்தப்படுவோரை பாதுகாப்புடன் விமான நிலையத்துக்கு வெளியே அழைத்துச் செல்வது என்பன தொடர்பாக இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(ம)

## ஸ்தாபகர் தினம்

காரைநகர், மே 13

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஸ்தாபகர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கல்லூரி நடராசா மண்டபத்தில் அதிபர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற உள்ளன.

பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினமும், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதியும் கலந்து கொள்ளவுள்ளனர். ஸ்தாபகர் நினைவு உரையை யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி வீரமங்கை யோகரத்தினம் நிகழ்த்துவார்.

(ஐ-73)

## தமிழ்விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள்

குருநகர், மே 13

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திவரும் தமிழ்விழாவின் இறுதி நாளான ஒன்பதாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 6.00 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் மாரீசன்கூடல் றோ. க. வித்தியாலய அதிபர் எஸ். என். உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் பிரதம விருந்தினராகவும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருள்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் சிறப்பு விருந்தினராகவும் இவ்விழாவில் கலந்து கொள்கிறார்கள். இந் நிகழ்வில், ஆசியுரையை சைவப்புலவர் சு. செல்லத்துரையும், வரவேற்புரையை கே. சிவலிங்கனும் நன்றியுரையை ஏ. ஆர். விஜயகுமாரும் நிகழ்த்துவர்

சிறப்பு கலை நிகழ்ச்சிகளாக நாட்டுக்கூத்து, நாடகம் என்பவை இடம்பெறும்.

இளவாலை திருமறைக் கலாமன்றத்தினரின் 'மன்னிப்பு' (சிந்து நடைக் கூத்து), யாழ். திருமறைக் கலாமன்றத்தினரின் 'சோழன் மகன்' ஆகிய நாட்டுக் கூத்துக்களும்—கொழும்பு திருமறைக் கலாமன்றத்தினரின் 'தீறல்கள்', திருகோணமலை திருமறைக் கலாமன்றத்தினரின் 'பொறி' ஹப்புத்தளை திருமறைக் கலாமன்றத்தினரின் 'நிலவுக்குள் ஓர் அமாவாசை' ஆகிய நாடகங்களும் இடம்பெற உள்ளன.

(ஒ-51)

# மரண அறிவித்தல்கள்

## பிரம்மஸ்ரீ சதாசிவசர்மா இராஜேஸ்வரசர்மா

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு, கற்குழி கந்தசாமி கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சதாசிவசர்மா இராஜேஸ்வரசர்மா நேற்று (12-5-2001) சனிக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும் ஸ்ரீ தேவபாலசர்மா, ஸ்ரீ சிவபாலசர்மா, ஸ்ரீ சச்சிதானந்த சர்மா, செல்வி ஜெயா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-5-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சிவன்வீதி, சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ யோகம்மா
(மனைவி)

தற்காலிக முகவரி:
சிவன் கோயில் வீதி,
சித்தன்கேணி.

நிரந்தர முகவரி:
கற்குழி கந்தசாமி கோயில், நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(87740)

## திருமதி சோமசுந்தரம் இராசம்மா

இருபாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் இராசம்மா 2001-05-11 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து சோமசுந்தரம் (இளைப்பாறிய மேற்பார்வையாளர், சிறுகைத்தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், தேவகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை) அவர்களின் அன்புத் தாயாரும், ஜெயக்குமாரி அவர்களின் அன்பு மாமியாரும், ரஜிந்தன் அவர்களின் அன்புப் பேர்த்தியாரும், வ. முருகையா (முன்னாள் கணக்காய்வாளர், இ போ. ச, யாழ்ப்பாணம், A M T. நிறுவனம், கொழும்பு), கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகமுத்து சிவரத்தினம், திருமதி தவமணிதேவி முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12- 05- 2001) சனிக்கிழமை இருபாலை கிழக்கு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. தேவகுமார் (சிவா)
(மகன்)

அரசடி வீதி,
இருபாலை.

(87738)

## A, R. V. சோமசுந்தரம்

(பொன்னாவளை, களபூமி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட A. R வேலுப்பிள்ளை சோமசுந்தரம் நேற்று (12-05-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A R வேலுப்பிள்ளை பொன்னம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற K K. விஸ்வலிங்கம் — தெய்வானைப்பிள்ளையின் பாசமிகு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், சத்தியபாமா (லண்டன்), சத்தியகுமார் (லண்டன்), சத்தியமாலா (முன்னாள் ஊழியர் உதயன் பணிமனை), வளர்மதி, அருட்செல்வன் (குருநாகல்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதானந்தலிங்கத்தின் (லண்டன்) மாமனாரும், குலரத்தினம் (லிங்கன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம், தலைவர், யாழ். வர்த்தக சங்கம்) – கனகம்மா தம்பதியின் சம்பந்தியும் —காலஞ்சென்ற பாக்கியம், கனகம்மா, பரமசிவம்பிள்ளை, தவமணி, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஆறுமுகம், குலரத்தினம், காலஞ்சென்ற ஆறுமுகதிலகர், சிவபாலாம்பிகை, சிவசுப்பிரமணியம், பரமானந்தம் பஞ்சலிங்கம், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, திலகவதி, இந்திராணி, ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற A R. வினாசித்தம்பி — இராசம்மா தம்பதியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-05-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சவுந்தரம் (கமலாம்பிகை)
(மனைவி)
அருட்செல்வன் (மகன்)

பொன்னாவளை,
களபூமி, காரைநகர்.

(சி/16690)

## - இன்று இறுதி நாள் -

"கன்னித் தமிழ் வேர்களுக்குள் முத்தெடுப்போம்
காலந்தோறும் முத்தம் பதிப்போம்"

### யாழ்.திருமறைக் கலாமன்றம்

மகிழ்வுடன் நடத்தும்

## தமிழ் விழா - 2001

### நிகழ்ச்சிகள்

ஒன்பதாம் நாள் 13-05-2001 ஞாயிற்றுக்கிழமை

இடம்: புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை
நேரம்: மாலை 6.00 மணி

தலைமை : திரு.என்.எஸ்.உதயகுமார்
(அதிபர், றோ.க.வித்தியாலயம், மாரீசன்கூடல்)

சிறப்பு விருந்தினர் : அருள்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
(அதிபர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

பிரதமவிருந்தினர் : பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்
(இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)

ஆசியுரை : சைவப் புலவர் திரு.சு.செல்லத்துரை

#### கலை நிகழ்ச்சிகள்

நாட்டுக் கூத்து : 'மன்னிப்பு' (சிந்து நடைக் கூத்து)
(இளவாலை, திருமறைக் கலாமன்றம்)
'முத்தா? மாணிக்கமா?'
(யாழ்., திருமறைக் கலாமன்றம்)

நாடகம் : 'கீறல்கள்'
(கொழும்பு, திருமறைக் கலாமன்றம்)
'பொறி'
(திருகோணமலை, திருமறைக் கலாமன்றம்)
'நிலவுக்குள் ஓர் அமாவாசை'
(ஹப்புத்தளை, திருமறைக் கலாமன்றம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:2393

- திருமறைக் கலாமன்றம்.

(C/16686)

---

## யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், காரைநகர்

### ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்–2001

*காலம்* :- நாளை (14-05-2001) திங்கட்கிழமை பி.ப.1.00 மணி
*இடம்* :- நடராசா மண்டபம்
*தலைவர்* :- பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை *(அதிபர்)*
*பிரதம விருந்தினர்* :- செல்வி வைத்தியகலாநிதி
நவமலர் கனகரத்தினம்
*(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)*
*சிறப்பு விருந்தினர்* :- திரு. மு.பரஞ்சோதி
*(அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)*
ஸ்தாபகர் நினைவுரை :- திருமதி வீரமங்கை யோகரத்தினம்
*(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*காரைநகர்.* (87733)

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வநாயகியம்மா நடராசா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகியம்மா நடராசா நேற்று (12.05.2001) சனிக்கிழமை உடுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு நடராசாவின் அன்பு மனைவியும் இராசநாயகி(பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு), இராசசெல்வி, இராசசுந்தரி(ஆசிரியை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருச்செந்தில்நாதன்(பிரதேச செயலகம், முல்லைத்தீவு), தவராசா (தவம் ஸ்ரோர்ஸ், உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிதம்பரசுப்பிரமணியன், சிதம்பரவானதி, சிதம்பரபாரதி, சிதம்பரநடராசன், துவாரகன், ஹரப்பிரியன், துளசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவகாமிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இரத்தினம், சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான கனகநாயகியம்மா, சவுந்தரநாயகியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில்.*

(87741)

தகவல்:
சு.தவராசா
(மருமகன்)

---

## நூல் வெளியீட்டு விழா

வடமராட்சி,மே13

தும்பளை கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணமாகிய 'ஊரும் வாழ்வும்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.சிவயோகன் தலைமையில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பண்டிதர் க.சச்சிதானந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை வேதியானந்தராஜக குருக்களும் வாழ்த்துரைகளை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை, கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக அதிகாரி இ.சிவபுண்ணியம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலுக்கான அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.சிவபாலனும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸும் வழங்குவர். (ஜ-4-173)

---

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### FACULTY OF GRADUATE STUDIES

### MASTER OF EDUCATION COURSE - 2001/2002.

Applications will be received by the Faculty of Graduate Studies for the Master of Education Course upto 27th June, 2001.

***Admission Requirements:***

(a) A degree from a recognized University approved by the Senate.
(b) A Postgraduate Diploma in Education.
and
(c) A minimum of two years experience in teaching in a school or other educational experience relevant to the course.

***Duration:***

One year.
Lectures will be conducted in evenings and on Saturdays.

***Admission :***

Admission to the Course will be made on the basis of a written test and/or an interview conducted by the University.

***Written Examination:***

(a) The written examination will consist of a paper on 'General Educational Proficiency' of two hours duration.
(b) The contents of the paper will be in such a way to test
i) the candidates knowledge of Concepts, Principles and Practices of Education in general and
ii) aspects related to current educational practices in Sri Lanka.
(c) The paper will be structured to include MCQ type test items, Short Answer test items requiring the candidate to write the answers in the space provided and Short Essay type questions.

Written examination will be held on 2001-07-21.

***Medium of Instruction :*** Tamil

***Course Fee:***

Course Fee : Rs. 20,000/-
Application Fee : Rs.100/-
Registration Fee: Rs. 750/-
Library Fee : Rs. 750/- per year.
Library Deposit : Rs. 1,000/- (Refundable)

Application forms could be obtained at the Office of the Dean, Faculty of Graduate Studies. Those who wish to obtain them in person are required to produce a receipt from the People's Bank, University Branch or Shroff, Finance Branch of the University of Jaffna on a payment of Rs.100/- per form. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self-addressed Rs.3.50/- stamped envelope of 23x10cm. size to the Office of the Dean, Faculty of Graduate Studies.

Completed applications should be submitted to the Dean's Office, Faculty of Graduate Studies, University of Jaffna on or before 2001-06-27.

***REGISTRAR***
***University of Jaffna,***
***Jaffna.***
***2001-05-11***

(C/16684)

---


சுனில் ஆட்ஸ்

எதிர்வரும் 16.05.2001 இல் படச்சுருள்களும் வீடியோ கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்,
*277, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
அஜித், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
தீனா
காட்சிகள்: 10.30,2.00,5.00 (புதிய நேரம்)
16.05.2001 முதல்
பாட்டாளி
(C/16609)

லஷ்சுமி
இணுவில்
கடைசி வாரம்
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன், பிரகாஷ்ராஜ் நடிப்பில்
வாஞ்சிநாதன்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)
(87746)

நாகம்ஸ்
சுன்னாகம்
சினிமாஸ் லிமிட்டட் வெளியீடு
அர்ஜுன், மீனா, ஜோதிகா
நடித்த
ரிதம்
(ரீல்ஸ் வெளியீடு)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு தினங்களில்
விசேட காட்சி 6 மணி
(87732)

The Barbara Mulvaney Computer Training Center

123, Temple Road, Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்தும் ஐ.நா.வின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையத்தில் உங்களை இணைத்துக்கொள்வதன் மூலம் உங்களின் கணனி அறிவினை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

COURSE DETAILS

Diploma in Microsoft Office
Diploma in Photo graphics
Diploma in Kids programming
Diploma in Desktop Publishing
Diploma in Information technology

Certificate courses

| | |
|---|---|
| Adobe Page Maker | Microsoft Word |
| Auto CAD | Microsoft Excel |
| Microsoft Visual Basic | Microsoft Access |
| Corel DRAW | Microsoft Power point |

*அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் (இரு பாலாரும்) ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள் அவர்களின் வசதிப்படி வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.*

மேற்படி வகுப்புக்கள் யாவும் 19-05-2001 அன்று ஆரம்பமாக இருப்பதால் 18-05-2001 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(C/16683)

- நிர்வாகம்


---

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
சி.சிவலிங்கம் (திருகோணமலை)
அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னப்பொடியன் சின்னவன்

*(நூலக வீதி, கைதடி மத்தி)*

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.30/16, வாவள தேவாலய வீதி,*
*வெலிகம்பிட்டிய, ஜா-எல.*

(C/16692)

N. உதயச்சந்திரன்
குடும்பத்தினர்.

2 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த

# யாழ். யுவதியை விடுவிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,மே13

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த இரு வருடங்களாக எதுவித விசாரணைகளும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். யுவதி ஒருவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குமாரவேலு லக்ஷ்மி என்ற யுவதியே உயர் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டவராவார்.

1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம 25ஆம் திகதி தாம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் - அச்சமயம் மூங்கில் தடிகளால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் -

பின்னர் அனுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டு, அங்கு எதுவித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் -

அவர் தனது அடிப்படை உரிமை மீறல் மனுவில் தெரிவித்திருந்தார்.

கடந்த வியாழக்கிழமை இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதியரசர்களான சாலந்தி அமரசிங்க, வடுகொட பிட்டிய, எஸ்.எச். யாப்பா ஆகியோர் குறிப்பிட்ட யுவதியை உடனடியாக விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தனர். (ம-6)

# புதிய மாவட்டங்கள் இரண்டு விரைவில் அமைக்கப்படும்

கொழும்பு,மே13

இலங்கையில் புதிதாக இரண்டு நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன. கல்முனை கரையோர மாவட்டம், மஹியங்கனை மாவட்டம் என அவை அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளை ஏற்று கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தொகுதிகளை உள்ளடக்கியதாக கரையோர மாவட்டம் அமைக்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரணவை பணித்துள்ளார்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்திலுள்ள தெகியத்தகட்டிய, பதுளை மாவட்டத்திலுள்ள மஹியங்கனை, கண்டி மாவட்டத்திலுள்ள உடத்தும்பறை ஆகியவற்றை உள்ளடக்கியதாக மஹியங்கனை நிர்வாக மாவட்டத்தை ஏற்படுத்த தாம் தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் ரிச்சர்ட் பத்திரண தெரிவித்துள்ளார். (ம)

# சுருக்கெழுத்தாளர் சங்கம் அமைச்சர் டக்ளஸூக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,மே13

மத்திய அரச சேவையில் தட்டெழுத்தாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கென கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படாததால் விரைவில் அவற்றை வெளியிடுவதற்கு ஆவன செய்து தரவும்.

இவ்வாறு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கிய மகஜரில் கோரியுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் வருமாறு:-

★ மேற்படி பரீட்சையில் சித்தியடையும் அனைவருக்கும் பெற்ற புள்ளிகளின் வரிசைப்படி நியமனங்கள் வழங்க இணைந்த சேவையின் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்து தரவும்.

★ போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக யாழ்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கவும்.

இந்த விடயங்கள் தொடர்பாக தாங்கள் உடனடி நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புவதோடு தங்களது சாதகமான பதிலையும் எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

## நடமாடும் செயலக சேவை

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலகம் அச்சுவேலியில் நாளை திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

நடமாடும் செயலக சேவைகள் அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலக மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையின் போது சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வளலாய்ப் பகுதி பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டன. (ம-11)

## வெள்ளவத்தையில் கொள்ளை!

கொழும்பு,மே13

கொழும்பு வெள்ளவத்தையில் காலி வீதியில் - பிரட்றிகா வீதி முகப்புக்கு அருகில் - நேற்றிரவு 8 மணியளவில் கொள்ளைச் சம்பவம் ஒன்று நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

'பிக் - அப்'பில் வந்த - இனந்தெரியாத - சிலர் காலி வீதியில் உள்ள 'மணி சேஞ்சர்' வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைத் தாக்கிவிட்டு வெளிநாட்டு கரன்ஸிகள் உட்பட பெருமளவு பணத்தைச் சுருட்டிக் கொண்டு சென்றதாகக் கூறப்பட்டது.

கொள்ளையரின் கத்திக்குத்துக்கு இலக்கான ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

கொள்ளையிடப்பட்ட பணத்தின் பெறுமதி தெரியவரவில்லை. (ம)

## பனையில் ஏறியவர் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம்,மே13

பனை மரத்தில் ஓலை வெட்ட ஏறியவர் தவறிவீழ்ந்து படுகாயமடைந்தார்.

குப்பிளான் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லக்குட்டி தேவராசா(வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-15)

## இடி மின்னலுடன் இன்று அதிகாலை கடும் மழை

யாழ்ப்பாணம்,மே13

இன்று அதிகாலை 12.45 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் யாழ் நகரத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்தது. பரவலாக மின்னல் தாக்குதல்கள் இடம் பெற்றன. ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (உ)

## 7 மாதங்களின் பின்னர் மீண்டும் கிடைத்த அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,மே13

கடந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகைக்கு பொருள்கள் வாங்கச் சென்ற சமயம் தனது அடையாள அட்டைகளைத் தொலைத்த யுவதி ஒருவரின் அடையாள அட்டைகள் 7 மாத காலத்தின் பின்பு மீண்டும் கிடைத்துள்ளன.

யாழ்.நவீன சந்தைப் பகுதியில் பொருள்கள் கொள்வனவு செய்து கொண்டிருந்த போது சைக்கிளில் இருந்த சிறிய கைப்பையை தொலைத்த இந்த யுவதி அதற்குள் இருந்த தேசிய, விசேட மற்றும் அலுவலக அடையாள அட்டைகளையும் இழந்தார்.

7 மாத காலத்தின் பின்பு தபால் ஊழியர் மூலமாக குறிப்பிட்ட மூன்று அடையாள அட்டைகளும் அண்மையில் அவருக்கு கிடைத்துள்ளன.

தபாற்பெட்டி ஒன்றில் இருந்தே மேற்படி அடையாள அட்டைகள் கிடைத்ததாக தபால் ஊழியர் தெரிவித்துள்ளார். (ம-10)

# நீதியான தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமான நேரம் இதுதான்.

"நோர்வேயின் சமரச முயற்சியை முழு அளவில் வரவேற்கின்றோம்.

"நோர்வேயின் முன்முயற்சி எந்த அடிப்படைக்குள் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த அடிப்படைக்குள் இந்த இனப்பூசலுக்கு நிலையான - நீதியான - தீர்வு சிட்டுவதற்கு பொ.ஐ. முன்னணி அரசும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் இயன்ற முழு நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்" - என்றும் அந்த நீண்ட அறிக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து கூட்டணிப் பிரமுகர்கள் தமது நேற்றைய செயற்குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்தனர். எனினும் அக்கூட்டத்தில் இது விடயமாகத் தீர்க்கமான முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை என அறியவந்தது. (உ)

## இப்போது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரப் பத்தி எழுத்தாளர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரிட்டிஷ் அரசாங்கத்தை கோரியிருந்தது என்று கடந்த வாரம் குற்றம் சாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது'

- இப்படி அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (உ)

# தமிழ்க் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு கொழும்பில் அந்தத் தமிழ்க்கட்சியின் பிரமுகர் கேள்வி எழுப்பினார்.

### முஸ்லிம் பிரமுகர் கருத்து

"அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு திகதி ஒன்று தருமாறு ஐ.தே. கட்சி நாளை சபாநாயகரைச் சந்தித்து கோர இருக்கின்றது. தமிழ்க் கட்சிகளையும் தமிழ் மக்களையும் ஏமாற்றி, இந்தப் பிரேரணைக்கு அவற்றின் ஆதரவு கிட்டாமல் செய்யும் நோக்குடனேயே அரசு அவசரப்பட்டு புலிகளுடன் உடன்பாடு காணப்பட்டு விட்டது என்ற பொய்யான அறிவிப்பை விடுதததுʼʼ - என்று முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் குறிப்பிட்டார்.

அரசின் இந்த பொய்யான அறிவிப்பை அடுத்து -

'சமாதானத்துக்கான ஒளிக்கீற்று தென்படும் சமயத்தில் அரசைக் கவிழ்ப்பதற்கு துணைபோகமுடியாது' - என்று கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்திருப்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

அரசு ஏமாற்ற முயலமுன்னரே கூட்டணியின் மூத்த தலைவர்கள் ஏமாறத் தயாராகிவிட்டார்கள்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் அரசுக்கு உண்மையில் அக்கறையில்லை. அதனால்தான் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்தத்தை நான்கு மாதங்களாக அரசுத் தரப்பு நிராகரித்து வந்தது.

இப்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தப்புவதற்காக - அதற்குத் தமிழ்க் கட்சிகளின் ஆதரவு கிட்டாமல் செய்வதற்காக - நேரடிப் பேச்சுப் பற்றி பொய் அறிவிப்பை விடுக்கின்றது. தமிழ்க் கட்சிகள் இது விடயத்தில் மேலும் இறுக்கிப்பிடித்தால் - அக்கட்சிகளைத் திருப்திப்படுத்துவதற்காக - அரசு, தானே முந்திக்கொண்டு ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தம் செய்வதாக புரட்டு அறிவிப்பு விடுத்தாலும் விடுக்கலாம்" என்றும் அவர் கருத்து வெளியிட்டார். (உ)

## மாவனல்ல..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 17 ஆம் திகதி நாட்டில் உள்ள அனைத்துத் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளையும் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலைக்குச் செல்லவுள்ளனர்.

மாவனல்லவில் முஸ்லிம்களின் உடைமைகளை எரித்துச் சேதமாக்கிய சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் வன்செயல் சம்பவங்களைக் கண்டிப்பதுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம். - என்றுள்ளது. (ம-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மயில்வாகனனார் பத்மாசனி

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த திருமதி மயில்வாகனனார் பத்மாசனி அம்மையார் காலமாகிவிட்டார்.

இவர் பண்டிதர் க.மயில்வாகனனாரின் பாசமிகு வாழ்க்கைத் துணைவியார் ஆவார்.

அன்னார் இந்திரா யோகானந்தசிவம், சாரதா தங்கவடிவேல், தயானந்தன்(கிராம சேவையாளர்), சிவானந்தன் (பாரிசு), திருக்கேதீஸ்வரி உமாகணேஸ்வரன் (பாரிசு), முருகானந்தன் (பாரிசு), கணேசானந்தன் (பாரிசு) ஆகியோரின் அன்புத் தாயாரும், வ.யோகானந்தசிவம் (அதிபர் - வவுனியா), கு.தங்கவடிவேல்(மருந்தகர், மட்டக்களப்புச் சிறைச்சாலை), ஜெயலட்சுமி, ராகினி, ந.கணேஸ்வரன்(பாரிசு), ஜெயரஞ்சனி, சந்திரகலா ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

*"வேல்" வாசம்"*
*வட்டுக்கோட்டை* (87745)

தகவல்:
கணவர்

## வேலுப்பிள்ளை முருகேசு

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகேசு அவர்கள் நேற்று (12.05.2001) சனிக்கிழமை வரணி வடக்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு வேலுப்பிள்ளை - வேலுப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புப் புதல்வனும், சிவசோதிமலரின் அருமைக் கணவரும், செல்வநாயகத்தின் அன்புச் சகோதரனும், மு.பிரகலாதனன் (ஆசிரியர், வரணி மகா வித்தியாலயம்), மு.திவ்வியபாலன் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம் சாவகச்சேரி), மு.வரதராஜன் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), மு.பாஸ்கரன் (மாணவன்), மு.சரோசா (மாணவி), மு.யோகேஸ்வரன் (மாணவன்), மு.கோகிலரமணி (மாணவி) ஆகியோரது பாசமிகு தந்தையும், பி.ராதா (ஆசிரியை) அவர்களின் அன்பு மாமனாரும், பி.திரிஷிகா, பி.ஆஷிகா (ஆஷி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2001) ஞாயிற்றுக்கிழமை வரணி வடக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்குத் தகனக்கிரியைக்காக முள்ளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி,
*குடமியன் வரணி,*
தற்காலிக முகவரி:-
*'குற்றாலம்', வரணி வடக்கு*
*வரணி.*

தகவல்:
மு.பிரகலாதனன்
(மகன்)

உங்களின் கணனித் தேவைகளுக்கு
எங்களின் சேவைகள்




Pentium III 933MHz
TOSHIBA - LapTop

வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில்
Video Capturing, Video Editing, Video Titling
மேற்கொள்ளக் கூடிய வசதிகள் நிறைந்த கணனிகளும் விற்பனைக்குண்டு.

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும்
நியாயமான விலையிலும் உத்தரவாதத்துடனும் நீங்கள்
பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம்

IIS SALES UNIT
100, Clock Tower Road, Jaffna.
T.P. No : 2831 E- Mail : iis@sltnet.lk

CHEMISTRY CENTRE
83,பலாலி வீதி
கந்தர்மடம்
✪ Group Classes இற்காக
உருவாக்கப்பட்ட நிறுவனம்
ஆரம்பம்:- 13-06-2001
ஆசிரியர்:- திரு.அன்பு
(87747)

படிவம்
விவசாய டிப்புளோமா
கற்கை நெறிக்கான
படிவம் விற்பனையாகின்றது.
(வர்த்தமானி பார்வைக்கு உண்டு)
பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C/56685)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் (13.05.2001) இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.